www.tamilarangam.net




## வளைகுடா யுத்தம்

## மகமதியரும் பாரதியும்

## அந்தக்கால யாழ்ப்பாணத்து வாகனங்கள்

மெல்பன் காற்று　　சிறுகதை　　கவிதை

பங்குனி 1991 March

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# *WHY INSIST ON LARICH BRAND PRODUCTS?*

The philosophy of Larich is to take the best and make it better.

Accordingly, only the finest ingredients are selected, and the products are manufactured in the most modern and fully equipped factory in Sri Lanka.

Witness the latest range of Larich products - prominent amongst them are Ginger Paste, Garlic Paste, Biriyani Mix, Chicken Mix, Fish Curry Mix, Rasam Mix, Seer Dry Fish Curry and Roasted Red Rice Flour - all simple to use and easy to store.

**All of the companies listed herebelow are HINDUSTAN/LARICH Approved and can be relied upon for quality service and Reliability in their specialised areas.**

| | |
|---|---|
| Bendigo | – Bendigo Wholefoods, 324 Lyttetown Terrace. |
| Bennetswood | – Fiji Food Centre, 59B Station Street. |
| Braybrook | – Harans, f2/53-67 Cranwell Street. |
| Brunswick | – Garuda, 824 Sydney Road. |
| Caufield | – Spiceland, 265 Bambra Road. |
| Clayton | – a) Clayton Asian Store, 1310 Centre Road. |
| | – b) Truspice, 145 Carnish Roan. |
| | – c) Hong Kong Asian Food Market, 367-369 Clayton Rd. |
| Dandenong | – a) Hindustan Imports, 48 Dingley Avenue. |
| | – b) Mihiri's, 117 Foster Street. |
| | – c) Asia Mart, Shop 15, Dandenong Arcade. |
| Essendon | – Curry Corner, 187 Napier Street. |
| Footscray | – K L Patel (Milk Bar), 716 Barkly Street. |
| Fitzroy | – Bombay Bazaar, 197/B Brunswick Street. |
| Geelong | – Siron's Spice & T/Away, 35 Reigate Rd, Highton. |
| Glen Iris | – Gardiner Milk Bar, 275 Bourke Road. |
| Glenroy | – Glenroy Asian Food Centre, 796/K Pascoe Vale Road. |
| Glen Waverley | – Venus Industries, Thompson Street. |
| Heidelberg | – Asian Store & Milk Bar, 180 Burgundy Street. |
| Keysbrough | – Chinatown, Shop 130, Parkmore Shopping Centre. |
| Moonee Ponds Mkt. | – a) Fiji Products, 6/35 Aspen Street. |
| | – b) Baili Asian Groceries, 8 Aspen Street |
| Moorabbin | – Spice Rite, 336 South Road. |
| Mt. Waverley | – Trevors Mixed Buisness, 41 Sunhill Road. |
| Oakleigh | – Golden Groceries, 56 Portman Street. |
| Ormond | – Ormond Spice, Shop 4, 456 North Road. |
| Prahran | – a) Oriental Mart, 161 Chapel Street. |
| | – b) Touch of Spice, Shop 22, Prahran Central. |
| Preston | – a) Dong Thinh Int. Food Store, 435 High Street. |
| | – b) Rahma Trading, 5/417 High Street. |
| Springvale | – Nanyang Supermarket, 3 Windsor Avenue. |
| St. Albans | – Masala Queen, 14 Princes Arcade St. |
| St. Kilda | – Fiji Produce, 184 Barkly St. |
| Sunshine | – Thun Hung, 278 Hampshire Road. |

'OSAI'
20 RUE DE LA FOLIE MERICOURT
75011 PARIS

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உள்ளே...


| | | |
|---|---|---|
| வளைகுடா யுத்தம் | *நித்யன்* | 6 |
| 'இவ நிறமில்லை' | *ரதி* | 11 |
| விமர்சனமும் விஞ்ஞானமும் | *செ. வே. காசிநாதன்* | 14 |
| மெல்பன் காற்று | *வாயுபகவான்* | 17 |
| சிறுவர் களஞ்சியம் | | 20 |
| ஏழு ஸ்வரங்களுக்குள் | *ராம்நாத்* | 22 |
| மெல்வே | *மாலவை நித்தியானந்தன்* | 25 |
| முகமதியரும் பாரதியும் | *தில்லைக்கூத்தன்* | 29 |
| வாகன வகைகள் | *எஸ். பொன்னுத்துரை* | 31 |
| விமர்சனம் | *க. சிறீபாலன்* | 37 |


**ஆசிரியர் : விமல் அரவிந்தன்**

வாசகர்களிடமிருந்து தரமான ஆக்கங்களை மரபு வரவேற்கிறது. அத்துடன் உங்கள் மனதில் எழும் எண்ணங்களை ஏனைய வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுவதற்கு 'ஆசிரியருக்கு கடிதங்கள்' என்ற பகுதியையும் பயன்படுத்தலாம். எழுதுவன யாவும் சுருக்கமாக அமைதல் விரும்பத்தக்கது.

## சந்தா விபரம்.

அவுஸ்திரேலியா – $12.00 நியூசிலாந்து – $20.00
பப்புவா நியூ கினி – $20.00 பீஜி தீவுகள் – $20.00
இலங்கை, இந்தியா – $5.00(தபாற்செலவு மட்டும்)
ஏனைய நாடுகள் – $30.00
(அவுஸ்திரேலிய டாலர்கள்)

வருடத்துக்கு ஆறு இதழ்கள்.

Abirame Publications, P.O. Box 232, Wantirna South, Victoria 3152, Australia.

Please make your Cheque/Postal Order payable to 'Abirame Publications'.

MARAPU is published by Vimal Aravinthan on behalf of ABIRAME PUBLICATIONS, P.O.Box 232, Wantirna South, Victoria 3152, Australia. The opinions expressed in Marapu, are those of the authors and do not necessarily represent those of the Editor or of the Publisher. Printed at LA-SHA Prints, 3 Viola Court, Mill Park, Victoria 3082, Australia.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மரபு

சுழலும் சக்கரத்தின் சுழலாத புள்ளியே மரபு.

சுவடி 1 ஏடு 4

# அபிப்பிராயங்களைச் சிறைப்படுத்த வேண்டாம்

ஒரு பத்திரிகையின் சிறப்பும் பயனும் அது தனது சமூகத்திற்கு என்ன கருத்துக்களை முன்வைக்கின்றது என்பதிலும், அக்கருத்துக்கள் மக்களிடையே என்ன மாறுதல்களை ஏற்படுத்துகின்றன என்பதிலுமே தங்கியுள்ளது. இந்த வகையில் மரபின் இலக்குப் பற்றிய தூரப்பார்வை எமக்கு உண்டு. அதை நோக்கிய பயணத்தில் எதுவித சந்தேகமும் இல்லாமல் நடை போடுகின்றோம். அதே நேரம் மரபில் சொல்லப்படும் எல்லா விடயங்களும் முற்றாகச் சரியானவை என்ற அல்லது வாசகர்கள் அவற்றை முற்றாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற முரட்டுப்பிடிவாதம் எமக்கில்லை.

மரபில் இடம்பெறும் கருத்துப்பரிமாறல்களின் விளைவாக எமது சமூகம் பயன்பெறவேண்டும் என்பதே எமது விருப்பம். இதில் இடம்பெறும் கட்டுரைகளில் உள்ள அணுகுமுறைகள், மற்றவர்களினது அணுகுமுறைகளிலிருந்து வேறுபடலாம். ஆனால் அவற்றில் சொல்லப்படும் விடயங்கள் பற்றிய சிந்தனையை மக்களிடையே உருவாக்கவேண்டும் என்பதே எமது நோக்கம். அந்தப் பணியைச் சரிவரவும் பொறுப்புணர்ச்சியுடனும் செய்கின்றோம் என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு. **நாம் விடும் தவறுகளைச் சரியான முறையில் ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்ய என்றும் தயாராகவுள்ளோம். உங்கள் ஆக்கபூர்வமான அபிப்பிராயங்களை எழுதி அனுப்புங்கள்.** .

□

பத்திரிகைச் சுதந்திரம் தமக்கும் கிடைக்காதா என உலகின் பல நாடுகளில் மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கும் பொழுது, இந்தப் பத்திரிகைச் சுதந்திரம் நமக்கெதற்கு என எம்மிடையே உள்ள ஒரு சிலர் கேள்வி எழுப்ப முயற்சிக்கின்றனர்.

இலங்கையில் வாழ்ந்த காலத்தில், அங்கிருந்த பல்வேறு சக்திகளின் அடக்கு முறைகளினால் எந்த ஒரு பத்திரிகையும் சுதந்திரமாக வெளிவர முடியவில்லை. அதிர்ஷ்டவசமாக அவுஸ்திரேலியாவில் வாழும் நாங்கள், இங்குள்ள பல நல்ல விஷயங்களில் ஒன்றான பத்திரிகைச் சுதந்திரத்தையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.இவ்வேளையில் பத்திரிகைச் சுதந்திரம் நமக்கேன் எனத் தனித்து ஒலிக்கும் ஒரு சில குரல்கள் ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றன. இதன் காரணத்தை **மேற்கொண்டு ஆராயும்பொழுது, சிற்சில குறைபாடுகளைப் பற்றி மக்கள் மத்தியில் கருத்துக்கள் முன்வைக்கப்படுவதைத் தவிர்ப்பதை நோக்காகக் கொண்டே இந்தக் குரல்கள் எழுப்பப் படுகின்றன என்று தெரிகின்றது..**

□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எந்த ஒரு அமைப்பும் பொது மக்களிடையே வந்துவிட்டால், அதன் பின் பொது மக்களின் விமர்சனத்தை எப்பொழுதும் எதிர்பார்க்கவேண்டும். இது முன்ங்கூட்டியே தெரிந்திருக்க வேண்டிய விஷயம். இந்தத் தெளிவு இன்னும் இங்கு ஏற்படவில்லையோ என எண்ணத் தோன்றுகின்றது.

தாம் பொதுச்சேவை செய்வதனால், தங்களைப் பற்றிய விமர்சனங்கள் எழக்கூடாது என்ற கருத்து ஏற்கக்கூடியதல்ல. ஆகா, ஓகோ என்று பாராட்டுவதானால் வாருங்கள்... இல்லையேல் ஒன்றுமே சொல்லாதீர்கள் என்ற மனநிலை வருத்தத்துக்குரியது.

**பொதுச்சேவையில் ஈடுபடுவது எவ்வளவு கடினமானது என்பதை நாம் அறிவோம். அவர்களது சேவை மனப்பான்மையை, தியாகத்தை மதிக்கின்றோம். மெச்சுகின்றோம். ஆனால் அவர்கள் தவறுகள் செய்யும் பொழுது மக்கள் விமர்சிக்கக் கூடாது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது..**

மக்கள் வற்புறுத்தி எவரையும் பொதுச்சேவைக்குப் போ எனத் தள்ளுவதிலை. பொதுச்சேவையில் ஈடுபட ஒருவர் தானாக விரும்பி, அதிலுள்ள கஸ்டங்களைத் தெரிந்து கொண்டுதான் முன்வருகிறார். அப்படி வந்த பின்னர் அவரது செயற்பாடுகள் பற்றிய விமர்சனம் (தவறுகளைச் சுட்டிக்காட்டும்) எழக்கூடாது என நினைப்பது, தன்னலமற்ற தூய சேவையின் நோக்கத்தையே மாசுபடுத்துகின்றது.

**இந்த நிலை மாற வேண்டும்.**

□□□□□

இதுகாலவரை மரபில் இடம்பெற்ற ஆக்கங்கள் பற்றியும், மரபு பற்றிய வாசகர்களின் எதிர்பார்ப்புகள் பற்றியும் அபிப்பிராயக் கணக்கெடுப்பு ஒன்று விரைவில் நடத்தப்பட இருக்கிறது என்பதை வாசகர்களுக்கு அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

மரபுக்கு வாசகர்கள் காட்டிவரும் அபிமானத்துக்கும் ஆதரவுக்கும் நன்றி தெரிவிக்கிறோம்

---

## அவுஸ்திரேலியச் செய்திகள்

***மெல்பன்***

தியாகராஜ உற்சவத்தை முன்னிட்டு The Academy of Indian Music & Cultural Studies (Aus.) நடாத்தும் இசை நிகழ்ச்சி எதிர்வரும் 07.04.91, ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு Monash High School (Mel 70 K10) இசையரங்கில் நடைபெறும். சிட்னியைச் சேர்ந்த டாக்டர் ராமநாதன், உமா ராமு ஐயர் ஆகியோரின் சிறப்பு இசைநிகழ்ச்சியும் இடம்பெறும்.

KEP ஸ்தாபனம் எதிர்வரும் வருடப்பிறப்பை முன்னிட்டு 13.04.91 அன்று கிழக்கு வாசல் திரைப்படத்தை Monash வளாகத்திலுள்ள யூனியன் தியேட்டரில் 6.30 மணிக்குத் திரையிட உள்ளது. தொடர்ந்து காப்டன் பிரபாகரன், முதற்குரல் ஆகிய திரைப்படங்களும் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

தொடர்ச்சி 36ம் பக்கம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வளைகுடா யுத்தம்

# பின்னணியும் விளைவுகளும்

– நித்யன்

எந்த யுத்தமும் துயரமானதே. அவ்வகையில், வளைகுடா யுத்தமும் நடைபெற்று ஓய்ந்துவிட்டது. சமனற்ற சக்திகளின் இந்த மோதலின் பெறுபேறு ஒன்றும் ஆச்சரியமானதல்ல. ஆனால் அழிவின் அளவுகளும், துரிதமும்தான் பலருக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளன.

அமெரிக்காவிலும், பிரித்தானியாவிலும் வெற்றிப் பெருமிதம் காணப்படுகிறது. எதிர்காலத்தில் 'குழப்படி' விடுபவர்களுக்கு இந்த யுத்தம் ஒரு 'எச்சரிக்கை' என்றும் கூறப்பட்டுள்ளது. வியட்னாமில் கேவலப்படுத்தப்பட்ட அமெரிக்கப் படைகளுக்கு இந்த யுத்தம் உற்சாகமடைய ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. 'உலகின் பொலீஸ்காரன்' என்ற தனது வேடத்தில் அமெரிக்காவுக்கு மேலும் மோகம் வளரக்கூடிய ஆபத்தும் உருவாகியுள்ளது. அதேவேளை இந்த யுத்தம் உலக மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துள்ளதால், அவர்களுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இடைவெளி மேலும் பெரிதாகியுள்ளது.

''அமெரிக்க மக்களாகிய நாம் கெட்டவர்களல்லர். நாங்கள் நல்லவர்கள். கருணையுள்ளம் படைத்தவர்கள்'' என்று அமெரிக்க ஜனாதிபதி வாய்திறந்து தம்மைத் தாமே புழுகி, உலகத்துக்கு உறுதிகூற வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

### *இரு நாடுகளின் அழிவு*

ஈராக்கும், குவைத்தும் அழிந்த நாடுகள் போலக் காட்சி தருகின்றன. கடுமையான உள்நாட்டு பிரச்சினைகளும் தலைதூக்கியுள்ளன. இந்த நாடுகளை புனர்நிமானம் செய்வது இலகுவான பணியல்ல. தற்கொலைக்கு ஒப்பான இந்தப் பேரழிவுக்குரிய காரணங்களில் சதாம் ஹூசெய்னின் ஆட்சியின் எதேச்சாதிகாரப் போக்கு, பிடிவாதம், உயிர்களை மதியாத் தன்மை அரசியற் சாணக்கியமின்மை போன்றவையும் முக்கியமானவையாகும். புராதன நாகரீகப் பெருமை மிக்க ஈராக் நாட்டின் அண்மைக்கால வரலாறு, சொந்த மக்கள் மீதும், அயல்நாட்டு மக்கள் மீதும் தொடுக்கப்பட்ட கேவலமான போர்களின் வரலாறாகவே உள்ளது.

தரைமட்டமாகியுள்ள குவைத் நாட்டை ஆட்சி செய்ததோ அரச பரம்பரையிலான மற்றொரு சர்வாதிகாரமாகும். ஊழலில் நீந்திக் கொழுத்த இந்த ஆட்சி, மேற்குலகின் கைப்பொம்மையாக இருந்து கொண்டு, எண்ணெய் வர்த்தகத்தில் அரேபிய நலனுக்கெதிராகச் செயற்பட்டது. இறுதியில் தனது நாட்டு மக்களை அழிவுக்குள் தள்ளியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### ஐ. நா. வும் உலகமும்

வளைகுடாப் பிரச்சினையில் ஐ. நா. சபையின் நிலை அணிலேற விட்ட நாயின் நிலையென்பதில் ரகசியமில்லை. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்துவிட்ட விபரீதத்தைப் பார்த்தபடி சிறிய நாடுகள் கைகட்டி நிற்கின்றன. கொரிய யுத்தத்தின் போதும் இவ்வாறுதான் ஐ. நா. சபையைக் 'கடத்திச்' சென்று, அமெரிக்கா தான் விரும்பியதைச் சாதித்தது.

'ஈராக்கின் பிடியிலிருந்து குவைத்தை விடுவிப்பதை' ஆதரித்துக் கைகளை உயர்த்தி அமெரிக்காவுக்கும் அதன் தோழமை நாடுகளுக்கும் போருக்கு 'லைசென்ஸ்' வழங்கிய உலக நாடுகள், கதை சதாமுக்குப் பாடம் படிப்பித்தல், சதாமைக் கொல்லுதல், ஈராக்கின் பலத்தைத் தரைமட்டம் ஆக்குதல் என்று திரும்பி, மறைமுகமான நோக்கங்கள் தலைகாட்டியபோது திகைத்துப்போய் – ஆனால் அந்தத் திகைப்பை மூடி மறைத்து நல்ல பிள்ளைகளாக நின்றன.

### கருத்துச் சுதந்திரம்

இறந்தவர், காயமடைந்தவர்களின் உண்மையான தொகை என்னவென்பது தெரியாது. சிலர் ஆயிரக் கணக்கில் என்கின்றனர்; சிலர் லட்சக் கணக்கில் என்கின்றனர். இரண்டு பக்கத்திலும் கடுமையான செய்தித் தணிக்கை அமுலில் இருந்தது. இதில் ஜனநாயகம் என்றும், எழுத்துச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், தகவல் சுதந்திரம் என்றும் வக்காலத்து வாங்கும் மேற்கு நாடுகள், பத்திரிகையாளர் மீது விதித்த கடுமையான செய்தித் தணிக்கை மிகவும் கேவலமானது. பத்திரிகையாளர்களைப் பதிவு செய்யும் முறையைக் கொண்டுவந்து, அவர்கள் அடிமைகளாக்கப்பட்டனர்.

வியட்னாமில் விட்ட பிழையை மீண்டும் விடமாட்டோம் என ஒரு அமெரிக்க உயரதிகாரி நேரத்தோடு சொல்லிவிட்டார். ''வியட்னாமில் நாங்கள் தோற்றது, அங்கு நடைபெற்ற விஷயங்கள் வெளியுலகத்துக்கு வந்து, அதனால் பொது மக்கள் கிளர்ச்சி செய்ததாற்தான். அல்லது வியட்னாமில் நாங்கள் வென்றிருப்போம்'' (?) என்பது வெறுமனே ஒரு அதிகாரியின் அபிப்பிராயமல்ல; அமெரிக்க அரச இயந்திரத்தின் கர்வத்தின் பிரதிபலிப்பு.

### அரசியற் சதுரங்கம்

சதாம் ஹுசெயினை இந்த யுத்தத்துக்குள் கணக்குப் பார்த்துத் தள்ளிவிட்டதே அமெரிக்காதான் என்று ஒரு தகவல் தெரிவிக்கின்றது. 'நீ குவைத்துக்குள் போனால், நாம் மற்றப் பக்கம் பார்த்துக் கொள்வோம்' என அமெரிக்க தூதரகம் சமிக்ஞை காட்டியதும், சதாம் ஹுசெயினின் ஆக்கிரமிப்புத் திட்டங்கள் நான்கு நாட்களுக்கு முன்பே சி. ஐ. ஏ. க்குத் தெரிந்திருந்தும் அமெரிக்க அரசு அதுபற்றி மௌனமாக இருந்ததும் அரசியல் சதுரங்கமாடும் அமெரிக்காவின் நயவஞ்சகத் தனத்தைக் காட்டுவதாக விமர்சகர்கள் விபரித்துள்ளனர்.

எப்படியாயினும், அமெரிக்காவில் சரிந்து விழுந்து கொண்டிருந்த ஜோர்ஜ் புஷ்ஷின் செல்வாக்கை இந்தப் போர் பிடித்து நிமிர்த்தியது மட்டுமல்ல; உச்சத்துக்கும் கொண்டு போயுள்ளது. இது போலவே பிரிட்டன், அவுஸ்திரேலியா, பிரான்ஸ் போன்ற மேற்கு நாடுகளின் அரசாங்கங்களும் போரால் பெரும் அரசியல் லாபமடைந்துள்ளன.

www.tamilarangam.net

### *ஆயுத உற்பத்தி*

அமெரிக்காவில், இழுத்து மூடப்பட்டுக் கொண்டிருந்த ஆயுத உற்பத்தித் தொழிற்சாலைகளிலெல்லாம் அமோக வியாபாரம். செல்வப் பலமும், அரசியற் பலமும் கொண்ட சர்வதேச ஆயுத உற்பத்தியாளர்களும், வியாபாரிகளும் குதூகலத்தில் ஆழ்ந்துள்ளனர்.

புதிய ஆராய்ச்சிகள் மூலம், கோடிக்கணக்கான டொலர்களைச் செலவழித்து உருவாக்கப் பட்டிருந்த நவீன ஆயுதங்களையும், விமானங்களையும் சோதித்துப் பார்ப்பதற்கு, உண்மையான மனிதர்களும், உண்மையான கட்டிடங்களும் இந்தப் போர் இல்லையெனில் கிடைக்குமா? (இந்தப் பரிசோதனைகளால் ஆயுதச் சமநிலை தமக்குப் பாதகமாகச் சரிந்து விட்டதாக சோவியத் யூனியனிலும் அழுகை கேட்கிறது.)

சவூதி அரேபியாவின் மீது தன் செல்வாக்கை வலுக்கட்டாயமாகப் பிரயோகித்து, 'சவூதி அரேபியாவைப் பாதுகாப்பதற்காக' அந்த நாட்டினுள் நுழைந்த அமெரிக்காவின் கதை அராபியர்களைப் பொறுத்தவரை ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த கதையாகப் போய்விட்டது.

சிறிய நாட்டைப் பெரிய நாடு ஆக்கிரமிப்பதென்பது, கிழக்குத் திமோர் தொடக்கம் கிரெனடா, பனாமா வரை, செக்கோஸ்லவாக்கியா தொடக்கம் எல்சல்வடோர் வரை அவ்வப்போது நடந்துவரும் விஷயம்தான் — புயல், பூகம்பம் வருவது போல. (அதனால் ஈராக் செய்த இந்த அக்கிரமம் சரியென்று அர்த்தமல்ல.) ஈராக் — குவைத் பிரச்சினையைத் தீர்த்திருக்கக் கூடிய நல்ல வழிகள் நிச்சயமாக இருந்தன.

### *'ஜனநாயகம்'*

ஆகவே, இவ்வளவு உயிர்களும், பொருளும் அழிந்தது எதனைச் சாதிப்பதற்கு? மத்திய கிழக்கிலும், உலகின் ஏனைய பகுதிகளிலும் சர்வாதிகார அரசாங்கங்களையும், மனித உரிமையை மதிக்காது, மக்களைச் சித்திரவதை செய்து அடக்கி ஒடுக்குகின்ற எதேச்சாதிகார அரசாங்கங்களையும் முண்டுகொடுத்துக் காப்பாற்றிவரும் அமெரிக்காவும் அதன் மேற்குலகக் கோஸ்டியும்தான், சாத்தான் வேதம் ஓதுவது போல ஜனநாயகம் பற்றியும், மனித உரிமைகள், சுதந்திரங்கள் பற்றியும் பேசி வருகின்றன. ஆனால் இத்தகைய அழிவின் பின் மீட்கப்படும் குவைத்தில் இருக்கப்போவது நிச்சயமாக ஒரு ஜனநாயக அரசாங்கம் அல்ல; கைப்பொம்மை அரசாங்கமே!

### *வறிய நாடுகளின் நிலை*

வளைகுடாப் பிரச்சினையால் மேற்கத்திய பொருளாதாரங்கள் பாதிக்கப்படுவதாக ஒரு அழு குரலும் கேட்கிறது. ஆனால் உண்மையில் பாதிக்கப்பட்டவர்கள், வறிய நாடுகளில் உள்ள அப்பாவி மக்கள்தான். இவர்கள் சிங்கத்தின் விளையாட்டில் அகப்பட்ட சுண்டெலிகள். அன்றாட சீவியத்தையே நடாத்த முடியாமல் தவிக்கும் இந்த நாடுகள்தான் யாரோ நடத்தும் போர்விளையாட்டினால் அடியும், உதையும் வாங்குகின்றன. 'அந்நிய உதவி' என ஒரு கையால் கொடுக்கும் மேற்கு நாடுகள், கொடுப்பதிலும் பத்து மடங்கை மற்றக்கையால் அபகரித்தும், அழித்தும் விடுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஏழை நாடுகளுக்காக முட்டைக் கண்ணீர் வடிக்கும் இந்த நாடுகள், பொருளாதார உதவிக்குப் போக வேண்டிய நிதிகளைத் திசைமாற்றித்தான் இந்தப் போருக்குள் பாய்ச்சுகின்றன. பஞ்சத்தில் தவிக்கும் மக்களையும், நோஞ்சான் பிள்ளைகளையும் ரெலிவிஷனில் காட்டி, அவர்களின் இரட்சகர்களாகத் தம்மைப் பாவனை செய்து மகிழும் மேற்கு நாகரீகம், இந்தப் போரால் அநியாயமாகும் நிதியினால் உலகின் எத்தனை கோடி மக்களின், பிள்ளைகளின் பசித்துயரைப் போக்கியிருக்கலாம் என்ற கணக்கை வசதியாக மறந்தும், மறைத்தும் விடுகிறது.

### *பலஸ்தீனப் பிரச்சினை*

வளைகுடாப் போர், இஸ்ரவேலால் நசுக்கி, ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பலஸ்தீன மக்களின் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்ற குரலை உலகெங்கும் ஒலிக்க வைத்தது. வல்லரசுகளின் ஆதிக்க விளையாட்டுக்குள் அகப்பட்டு நீண்டகாலமாகத் தத்தளித்துக் கொண்டிருக்கும் மத்திய கிழக்குக்கு அமைதி மீளவேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பியது. போர் மூலம் குவைத்தை மீட்க அதிகாரம் வழங்கிய ஐ. நா. சபைக்கு இவற்றையும் சாதிக்கும் சக்தி உண்டா? அதற்கு அமெரிக்கா வழிவிடுமா? எவர் சொல்லையும் கேட்காத அமெரிக்காவின் வளர்ப்புப் பிள்ளையான இஸ்ரவேல் சொற்கேட்குமா? போர் நடந்து கொண்டிருந்த போது, பலஸ்தீன மக்களின் பிரச்சினையை அரங்கத்துக்குக் கொண்டுவந்த சதாம் ஹுசெயினின் கோரிக்கையில் இருந்த நியாயத்துக்குப் பதில் கொடுக்க வேண்டிய ஒரே நிர்ப்பந்தத்தால் மேற்கு நாடுகள் 'போரின் பின் இப் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாகப்' பெரிதாக ஆரவாரித்தன. இந்த ஆரவாரத்தில் ஒரு சிறிதளவாவது செயலில் காட்டப்படுமா? ஈராக்கைத் தாக்கக் காட்டப்பட்ட அவசரத்தின் ஒரு கடுகளவாவது, பலஸ்தீனியர்களுக்கு நியாயம் வழங்கும் விஷயத்தில் காட்டப்படுமா?

### *அழிவில் வியாபாரம்*

இந்தப் போருக்காக நாடுகள் தோறும் திரட்டிய நிதியில், நிகர லாபம் கிடைக்குமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது! இதுபோக, போர் நடந்து கொண்டிருக்கும் போதே, அழிந்த குவைத்தையும், ஈராக்கையும் மீள நிர்மாணிக்கும் கொழுத்த வர்த்தக ஒப்பந்தங்களைக் கைப்பற்றவும், அவற்றின் எண்ணெயை உறிஞ்சிக் குடிக்கவும் மேற்கு நாடுகளிடையே கடும் போட்டாபோட்டி தொடங்கிவிட்டது. பொருளாதாரப் பழுவில் மாட்டிக் கொண்டுள்ள பல மேற்கு நாடுகளுக்கு, இந்தப் போர் 'கடவுள் கொடுத்த வரம்' போன்றது. எண்ணெய் மீது உறுதிப்படுத்தப் பட்டுவிட்ட ஆதிக்கத்தாலும், இந்தப் புனர்நிர்மாண வர்த்தகத்தாலும் மேற்கு நாடுகளுக்குக் கிடைக்கப் போகும் லாபம் கொஞ்ச நஞ்சமல்ல.

'எண்ணெய்க்காக இரத்தம் வேண்டாம்' என்று உலகெங்கும் ஓங்கி ஒலித்த சமாதானம் விரும்பும் மக்களின் குரல், செவிடன் காதில் ஊதிய சங்காகியது. ஈராக் போன்ற பலம் பெற்றுவரும் ஒரு நாட்டைத் தட்டி மடக்க வேண்டிய தேவையும், எண்ணெய் வளத்தைத் தனது சிறகுக்குள் வைத்திருக்க வேண்டிய தேவையும் அமெரிக்காவுக்கு நிறைவேறிவிட்டன.

யுத்தம் எப்போதும் போல், சோகமான விளைவுகளுடன் முடிவுக்கு வந்துள்ளது. ஆனால் இது ஒரு தற்காலிக முடிவாகவே இருக்கும். இந்தப் போரின் முடிவு, புதிய அரசியற் பிரச்சினைகளின் தொடக்கமாகும். அநியாயமான இந்தப் போருக்கு, பழமையானதும், பெருமை மிக்கதுமான ஒரு கலாசாரத்தைக் கொண்டுள்ள அரேபிய மக்களின் பதிலைக் காலம்தான் எமக்குச் சொல்லும். □.

www.tamilarangam.net

# சிட்னிக் கடிதம்

– சிட்னிக்குருவி

எழுபது எண்பதுகளில் கொழும்பில் ஒரு இலக்கியக் கூட்டத்துக்கு இருபது பேரைச் சேர்த்துவிட்டால் அது பெரிய சாதனைதான் என்பதை அறிந்தவர்கள் ஒத்துக்கொள்ளுவர். சிட்னியில் அதுவும் ஞயிற்றுக் கிழமை 9 மணிக்குமேல் நீடித்த இலக்கியக் கூட்டத்திற்கு நூறுபேர் வரை வந்திருந்தனர் என்பது இமாலய சாதனைதான்.

என்ன ஏது என்று கேட்காமலே நூற்றுக்கணக்கில் கூடக்கூடிய இடம் சிட்னி. ஆனால் இதுவரை வருடித்துக்கு ஒன்றிரண்டு நிகழ்ச்சிக்கு மேல் நடந்ததாக ஞாபகமில்லை. பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற பிரச்சினைதான். இலக்கியப் பூனைக்கு சென்ற இருபத்திநான்காம் திகதி மணி கட்டிவிட்டார் மாத்தளை சோமு. இனி இலக்கிய சலசலப்புகள் சிட்னியில் அடிக்கடி கேட்கும் என நம்புவோமாக.

~

ஒரே வார இறுதியிலேயே மற்றுமொரு நிகழ்ச்சி. மெல்போர்ன் காற்றுத்தான் திசை மாறி சிட்னியில் வீசத் தொடங்கிவிட்டதோ என்ற சந்தேகம். 23ம் திகதி சனிக்கிழமை நடந்த சிட்னி தமிழ்ப் பாடசாலை மாணவர்களின் நான்காம் ஆண்டு நிறைவு விழா வெறும் சிறுவர் நிகழ்ச்சியென்று ஒதுக்கிவிட முடியாதளவு தரத்தில் சிறந்திருந்தது. வழக்கம் போல நிகழ்ச்சி தொடங்குவதாகக் குறிப்பிடப்பட்ட நேரத்துக்கு முன்னரே சென்றவர்களுக்கே இருப்பதற்கு கதிரை கிடைக்கவில்லை. இந்த நிகழ்ச்சிக்குப் பின்னால் இருந்தவர்களின் உழைப்பு நன்கு வெளித்தெரிகிறது.

~ ~

சிட்னியிலுள்ள கம்பல்ரவுண் கவுன்சிலில் அண்மையில் அபிவிருத்தி அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட இந்துக் கோயில் கட்டிட விண்ணப்பம் பெரும் எதிர்ப்பு அலையை உருவாக்கிவிட்டது. இந்திய வர்த்தகர்களின் முயற்சி இது. இக் கோயில் முழுக்க முழுக்க பாதாள சாக்கடைக்கு கீழே அமையவுள்ளது. கோபுரங்களின் உயரத்தைக் கொண்டே கோயில்களை மதிப்பிடும் நிலையில் பாதாளத்தில் கோயிலா என்ற சந்தேகம் சிலருக்கு வரலாம். இந்தியாவில் பல கோயில்கள் நிலத்துக்குக் கீழ் இல்லையா என்று இவர்கள் வாதிடுகிறார்கள். குகைக் கோயில்களைச் சாக்கடைக்குக் கீழ் கட்டும் கோயிலுக்கு ஒப்பிடுகிறார்கள்.

பலத்த விவாதத்தின் பின் மிகச்சிறிய பெரும்பான்மையுடன் கவுன்சிலில் இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும் பொதுமக்கள் எதிர்ப்புத் தொடர்கிறது. வழக்கமாக வெள்ளைக்காரர் பாடும் பல்லவிதான். சூழலுக்கு சேதாரம். போக்குவரத்து இடஞ்சலை ஏற்படுத்தும். இது இனவாதம் இல்லையாம். கிறிஸ்தவ கோயில் வந்தாலும் எதிர்ப்பார்களாம்.

இதற்கிடையில் முஸ்லீம்கள் இது ஏற்கனவே தங்களுக்கு ஒதுக்கிய இடம், இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம் என்கிறார்கள். அயோத்தியில் அடிபடும் இராமருக்கு அவுஸ்திரேலியாவிலும் இழுபறிதான். பாதாளத்தில் கட்டுவதற்கு இத்தனை தடை என்றால் நிலத்தின் மேல் கட்ட வெளிக்கிட்டால் என்ன ஆகும் என்று நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது. □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சிறுகதை**

# 'இவ நிறமில்லை'

- ரதி




**புதிய எழுத்தாளர் அறிமுகம்:**

இங்கு வெளியாவது 'ரதி'யின் முதலாவது சிறுகதை. இவர் ஒரு கணக்கியலாளர். நல்ல வாசகியாக இருந்து, இப்பொழுது எழுத்துத் துறையில் கால்வைக்கிறார். தமிழில் பெண் எழுத்தாளர்களுக்குத் தட்டுப்பாடு இருப்பதாகக் கூறப்படுவதுண்டு. ரதியின் எழுத்து, ஒரு நல்ல நம்பிக்கையை மொட்டவிழ்க்கின்றது.

Tram ஆல் இறங்கி சும்மா கால் போன போக்கில் நடந்தாள் சாந்தி. மெல்பேர்னில் Sales நடக்கும் காலம். கடைகளில் இருக்கும் பலவர்ண துணி மணிகளை நோட்டமிட்டுக்கொண்டே போனாள். மனம் மட்டும் மீண்டும் மீண்டும் பெற்றோருக்கு அன்று காலை எழுதிய கடிதத்தையே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. இரவைக்கு ஜேம்ஸ்'டன் Restaurant போக இருக்கிறாள். கலியாண ஏற்பாடுகள்தான் main menu item கதைப்பதற்கு.. ஜேம்ஸ் இந்து முறையில் கலியாணம் நடக்க வேணும் என்று முதலே சொல்லியிருந்தார்.

பல நிமிடங்கள் நடந்தபின் ஒரு காப்பிக்கடைக்குள் புகுந்தாள். ஒரு கப் cappacino வும் கேக்கும் ஓடர் பண்ணிவிட்டு யன்னல் வழியே வெளியில் ஆள் நடமாட்டத்தை நோட்டமிட்டாள். மெல்போர்னும் இப்போ பல சாதி ஆட்கள் வாழும் multi cultural society ஆகிவிட்டது. கறுப்பர்கள் உட்பட உலகின் பல நாடுகளிலிருந்து மக்கள் இங்கு வந்து வாழ்கிறார்கள். அரசியலிலும் இது முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது. cappacino வந்தது.

ஒவ்வொரு முறையும் நாக்கை அள்ளியதையும் மறந்து, இன்றும் கப்பச்சீனோவைச் (சூட்டோடு) குடித்து வாயில் சூடு வாங்கிக் கொண்டாள். ஏனோ அந்த சூடு மீண்டும் பெற்றோருக்கு எழுதிய கடிதத்தை ஞாபகம் ஊட்டியது. கேக்குடன் கடிதத்தையும் அசை போட்டாள்.

அன்புள்ள அம்மா, அப்பா அறிவது,

உங்கள் கடிதம் கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சி. எனக்கும் படித்து முடித்தது பெரிய ஒரு சாதனையாகத்தான் தோன்றுகின்றது. சாந்தி M.Sc முடித்துவிட்டாள் என்று நீங்கள் எல்லோரிடமும் சொல்லித்திரிவீர்கள். இங்கு படிப்போ, வேலையோ முழு நாளையும் விழுங்கிவிடும். வேறு யோசனைகளுக்கு இடமில்லை. இப்போ வேலை தேடும் படலம். அதனால் யோசனையும், கவலையும் சேர்ந்து நேரத்தைப் போக்குகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நீங்கள் மீண்டும் எனது கலியாண விஷயமாக எழுதியிருப்பதாக மாமா சொன்னார். இனிமேல் நீங்கள் அதைப்பற்றி எழுதத்தேவையில்லை. நான் இப்பொழுது எழுதுவது உங்களுக்குப் பெரும் அதிர்ச்சியையோ, ஆத்திரத்தையோ, கவலையையோ உண்டுபண்ணலாம். ஆனால் நான் நன்றாக யோசித்துத்தான் ஒரு முடிவு எடுத்தேன். என்னால் எந்த விதத்திலும் உங்களை ஆறுதல் படுத்த ஏலாது. ஏனெனில் சாதி, சனம், நிறம், மொழி, மாகாணம் என்று எத்தனையோ பேதங்களாகப் பிரிந்து தாங்கள் போட்ட வட்டத்துக்குள் பிள்ளைகளை வளர்ப்பது எங்கள் சமுதாயம். பிள்ளைகள் வளர்ந்த பின்னும் குழந்தைகளாகப் பாவிப்பதும் எங்கள் வழக்கு.

எனக்கு இப்போ இருபத்தி ஒன்பது வயது. உங்கு பல்கலைக்கழகப் படிப்பு முடித்து வேலையில் இருக்கும் போது எனக்குக் கலியாணம் பேச வெளிக்கிட்டு நானும் நீங்களும் பட்ட அவமானங்களை நினைத்துப்பார்க்கிறேன். படிப்பில், விளையாட்டில், பாட்டில், சமையலில் இவையெல்லாவற்றிலும் திறமைசாலியாக இருந்த என்னை, உங்கள் ஒரே ஒரு பெண்ணை, கலியாணம் செய்ய ஒருவரும் வரவில்லை. 'மூக்கும் முழியுமாக இருந்தாலும் நிறம் குறைவு பாருங்கோ. இதுக்கே ஒரு இரண்டு லட்சம் டொனேசன் கேட்பினம்' என்று சொன்னவர்களும், 'கறுப்பு... இரண்டாம் தாரமாகச் செய்ய விருப்பமே?..' என்றவர்களும், 'வெளியில் இருக்கும் பெடியளும் tall, slim & fair என்று கேட்கிறாங்கள்' என்று தட்டிக்கழித்தவர்களும். இந்த அவமானங்கள் உங்கள் ஒரே பெண்ணுக்கு வருமென்று நீங்களே நினைக்கவில்லை.

பக்கத்துவீட்டு ராசமாக்கா, தனது மகன் ராகவனுக்குச் செய்யலாமென்றும், டொனேஷன் ஒரு லட்சம் தந்தால் சரி, ஆனால் நகை எல்லாம் போடவேணும் என்று சொல்லிவிட்டு, ராகவன் வெள்ளைக்காரியைச் செய்து கொண்டுவந்து நிற்க, நகை நட்டில்லாமல் மருமகள் இருக்கிறாள் என்று தன் செலவிலேயே, அந்த குண்டான – வடிவென்று சொல்ல ஒன்றுமில்லாத வெள்ளைமருமகளுக்கு நகை செய்து போட்டதையும் நினைத்துப்பார்க்கிறேன்.

என்னுடைய மனதில் கலியாணம் என்றாலே கசப்பு என்ற எண்ணத்தையூட்டிய நிகழ்ச்சிகள் இவை. என்னில் பிழையா? எங்கள் சமுதாயத்தில் பிழையா? வெள்ளைக்காரன் எங்களை ஆண்டது பிழையா? ஏன் எங்கடை ஆட்கள் வெள்ளையைப் பூஜிக்கின்றார்கள்? எப்போ தொடக்கம் இந்த வழக்கம்? இக்கேள்விகளுக்கு விடை கிடைக்காமல் இருக்கும் போதுதான் மாமாவின் அழைப்பு வந்து, மேற்படிப்பிற்காக அவுஸ்திரேலியாவிற்கு வந்தேன்.

இங்கும் மாமா சும்மா இருக்கவில்லை. பலரிடமும் கேட்டுப்பார்த்தார். கறுபென்றால் தொட்டால் பாவம் என்ற மாதிரி, மரியாதைக்கு ஏதோ சாக்குச் சொல்லிப் போய்விட்டார்கள். முருகன் தெய்வானை கறுப்பென்றுதானாம் வள்ளியைச் செய்தவன். அப்படி ஒரு நிலமை எனக்கும் வரலாம் என்றும் சொன்னாள் ஒரு மாமி.

இந்த நேரத்தில்தான் எனக்கு ஜேம்ஸ் என்னும் ஒரு அவுஸ்திரேலியருடன் பழக்கம் ஏற்பட்டது. பல்கலைக்கழகத்தில் அவருடன் சேர்ந்து ஒரு project செய்ய நேர்ந்தது. எங்களுடைய பாரம்பரியத்திலும், சாப்பாட்டிலும் மிகுந்த விருப்பம் கொண்ட ஜேம்ஸ், இரண்டு வருட பழக்கத்திற்குப்பின், தான் என்னைக் கலியாணம் செய்துகொள்ள விரும்புவதாகப் போன கிழமை சொன்னார்.

www.tamilarangam.net

அவருடைய நினைவாக நான் என்றும் போட்டிருக்க வேணும் என்று ஒரு வைர மோதிரமும் தந்து... அந்த மோதிரத்தை எனது விரல் அலங்கரிக்கும் என்றும் சொன்னார். வைரத்தோடும் வேறு நகைகளும் அவற்றை அணியும் பெண்ணால்தான் அலங்கரிக்கப் படுகின்றன என்று நாம் எபோதாவது நினைப்பதுண்டா?

ஒரு கிழமை கண்விழித்து பலதையும் யோசித்தபின் நேற்று நான் ஒரு முடிவுக்கு வந்தேன். என்னை எனக்காக விரும்பும் ஒரு ஆடவனை ஒரு வித பாகுபாடும் காட்டாமல் எனது கணவனாக ஏற்பது என்று. ஏன் இவ்வளவு காலமும் கலியாணம் செய்துகொள்ளவில்லை என்று ஜேம்ஸ் கேட்டார். நான் எனது நிறத்தைக் காரணம் சொன்னதும் நம்பமுடியாமல் சிரித்தார்... நான் பொய் சொல்லுவதாக... 'after all you are all different shades of brown' என்று சொல்லி, உங்களுக்குள் இப்படி ஒரு பாகுபாடா? என்று கேட்டார். நான் எப்படி விளங்க வைக்க?

இவ்வளவு நாளும் நான் ஜேம்ஸைக் காதலிக்க எனது கட்டுப்பாடுகள் விடவில்லை. ஆனால் இன்று தொடக்கம் காதலிக்க, கலியாணம் செய்துகொள்ள இருந்த கட்டுப்பாடுகளை உடைதெறிந்துவிட்டு, எனக்கு நானே சுதந்திரம் வாங்கித் தந்துவிட்டேன். மாமாவிற்கும் இதில் சம்மதம். உங்களிடமிருந்து என்ன பதிலை எதிர்பார்ப்பது என்று தெரியவிலை. நீங்கள் உங்கள் உடல்னிலைகளைக் கெடுக்காது என்னை ஆசீர்வதிக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் விரும்பினால் கலியாணத்தை எங்கள் ஊரிலேயே வைக்கலாமென்று ஜேம்ஸ் சொல்கிறார். உங்கள் அனுமதி கோருகிறோம்.

இப்படிக்கு உங்கள் அன்பு மகள்,

சாந்தி.

Waitress bill கொண்டுவந்து வைக்க, அவளது நினைவலைகளும் துண்டிக்கப்பட்டன.

'I like your ring' என்று சொன்னாள் waitress.

'Me too' என்று சொல்லி bill லை settle பண்ணிவிட்டு பதினாறு வயதுக் குமரிபோல் ஒரு துள்ளளுடன் காதலில் இருக்கும் பெண்ணுக்கேயுரிய பூரிப்புடன் சிரித்துக் கொண்டு எழுந்து நடந்தாள். Tram stop ஐ நோக்கி விரைந்தன அவளது கால்கள்.

(யாவும் கற்பனை) □

நீதிபதி : 'உனக்கு வயது என்ன?'.

சாட்சி : 'நாற்பது'.

நீதிபதி : 'இதையேதான் மூன்று வருடங்களாகச் சொல்லுகிறாய்'.

சாட்சி : 'மற்றவர்களைப்போல இன்றைக்கு ஒன்று, நாளைக்கு ஒன்று சொல்கிற ஆளில்லை நான்'.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விமர்சனமும் விஞ்ஞானமும்

**செ. வே. காசிநாதன்.**

மெல்பனில் கடந்த சில மாதங்களில் நடைபெற்ற கூட்டங்கள் சிலவற்றில் விமர்சனம் என்கிற சொல் அதிகம் பயன்படுத்தப்பட்டது. விமர்சனம் முக்கியம் என்றும், விமர்சனத்துக்கு இடம் அளிக்கப்பட வேண்டும் என்றும், தங்களுடைய சஞ்சிகையில் / அமைப்பில் விமர்சனத்திற்கு எப்போதும் இடம் கொடுக்கப்படும் என்றும், எல்லோரிடமிருந்தும் விமர்சனம் வரவேற்கப்படுகிறதென்றும் பலர் சொன்னார்கள். மாவை நித்தியானந்தன் ஒரு கூட்டத்தில் பேசுகையில், விமர்சிப்பது எங்களது உரிமை, பொதுப்பார்வைக்கு வந்துவிட்ட எதனையும் விமர்சிக்க நாங்கள் யாரையும் அனுமதி கேட்க வேண்டியதில்லை என வலியுறுத்தினார். ஏன் இதை இப்படி பெரிதுபடுத்தி அலசுகிறார்கள் என்று யாரும் கேட்கலாம்.

○

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதுகளிலே, கைலாசபதி சில பேச்சுக்களில், இப்போதைய தமிழ் மோகம் ஏன் என்று கேட்டுக்கொண்டு, தமிழுக்கு அபாயம் வருகிறதாக பரவலாய் ஒரு பயம் நிலவுகிறபோது இப்படித் தீவிரப்படுத்தப்பட்ட ஒரு பக்தியும், முனைப்பும் உண்டாகிறது என்று கண்டுபிடித்துச் சொன்னதாக ஞாபகம். 'அடியும் முடியும்' என்கிற அவரது கட்டுரைத் தொகுப்பில் இதுபற்றிய ஒரு கட்டுரையும் உண்டென்று நினைக்கிறேன்.

○

சில ஆண்டுகளுக்கு முன்வர் வரை லண்டன் பொருளாதாரப் பள்ளியில் மெய்யியற் பேராசிரியராய் இருந்த காள் பொப்ப(ர்) இந்த நூற்றாண்டின் தலைசிறந்த சிந்தனையாளருள் ஒருவர் என்று பலரால் கருதப்படுபவர். விஞ்ஞானம் என்று போற்றப்படுகிற ஒரு துறை அல்லது சிந்தனை முறைக்கும், விஞ்ஞானமல்லாத ஒன்றுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன என்பதற்கு விடைகாண்பதை – விஞ்ஞானத்தின் உயிர்நாடியை வெளிப்படுத்துகிற பணியை தன்னுடைய முதல் வேலையாக வரித்துக்கொண்டவர். இந்த வினாவிற்கு அவர் கண்டுபிடித்துத் தந்த விடையே, அறிவுபூர்வமாய் செயற்படும் வாழ்கையென்பதன் இலட்சணமும் ஆகும் எனும் கருத்தும், அவரது பிந்திய எழுத்துக்களில் இடம்பெற்றது.

விஞ்ஞானக் கொள்கைகளுக்கும், விஞ்ஞானங்களிலே இடம்பெறக்கூடிய வசனங்களுக்கும் உள்ள சிறப்பு அவை பொய்க்கிற போது, அவை பிழையாகிற போது, அவை பொய் அல்லது பிழை என்கிறதைத் தெரிந்து கொள்ள, காட்ட முடியும். விஞ்ஞானத்துக்கும், விஞ்ஞானமல்லாததற்குமிடையே பொப்ப(ர்) கண்டு சொன்ன வேறுபாடு இதுதான். பிழையைப் பிழை என்று தெரிந்து கொள்வதிலே உள்ள அனுகூலம், அடுத்தபடியாக அதனை நிராகரிக்க முடியும். பிழையைப் பிழை என்று கண்டுகொள்ள முடியாத இடத்திலே, அதற்கு அப்பாலே போகும் முயற்சிக்கும் இடமில்லாது போகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எந்தமாதிரி எது நிகழ்ந்தாலும், யார் எது சொன்னாலும் பாதிக்கப் படாதன போலவும், சாசுவதமான உண்மைகள் போலவும் தோன்றும் கூற்றுக்கள் குருவாக்காயோ, தலைவரது கொள்கைப் பிரகடமாகவோ எம்மை ஆகர்ஷிக்கலாம்; எங்களை வசீகரித்து எமது வாழ்க்கையை பிறப்பிலிருந்து இறப்புவரை வேகமாய் வழிப்படுத்தலாம். ஆனால் அறிவுபூர்வமாய் அணுகப்படக்கூடிய கொள்கையெனின், ''இப்படி இப்படி நடந்தால் நாம் சொல்லுவது பிழை எனக் கண்டுகொள்ளலாம்'' என்று உரைத்துப் பாரக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும். மற்றது சித்தாந்தம். முடிந்த முடிபு.

பொப்பரது கொள்கைப்படி அறிவுபூர்வமான வாழ்க்கைக்கும், சித்தாந்தத்தின் வழ்க்கைமுறைக்கும் இடையே வேறுபாடு உண்டு. அறிவுபூர்வமாய் வாழ விரும்புபவன் தன்னுடைய கொள்கை பிழையாய் இருக்க முடியும் என ஏற்றுக்கொண்டு அது பிழையெனக் காட்டக்கூடிய ஆதாரங்களைத் தேடுவதில் ஈடுபடுவான்; கண்களை அகலத் திறந்து வைத்திருப்பான்; தனது கொள்கையை எதிர்ப்பவனை நயந்து கேட்பான். விஞ்ஞானமும் அறிவும் வளர்வது இவ்வழியே என்று விமர்சனத்தின் இன்றியமையாமையை உணர்ந்திருப்பான்.

சித்தாந்தி இதற்கு மாறானவன். ஆதரவாளர்களைத் தேடி அணைப்பான். விமர்சகர்களைக் கண்டால் சினப்பான். தன்னுடைய கொள்கை சாசுவதமான உண்மையென்கிற நம்பிக்கை அவனுக்கிருக்கிறபடியினால், விமர்சகனுடைய கண்டனத்துக்குக் காரணம் அவனைப் பீடித்திருக்கும் மாயை, கள்ளம், கபடு என்று வாதிப்பான். தன்னுடைய கொள்கையைப் புனராய்வு செய்ய முயற்சிக்கமாட்டான்.

சித்தாந்தி தன்னுடைய கொள்கையைப் புனராய்வு செய்ய மறுக்கிறான் என்று சுட்டிக்காட்டுவதோடு நின்றிருந்தால் பொப்பரது சிந்தனையைப் பெரிதாகக் கொண்டாட வேண்டியதில்லை. சித்தாந்தி விரும்பினாலும் அவனால் தன்னுடைய கொள்கையை புனராய்வு செய்து கைவிடமுடியாது எனக்காட்டியது அவரது சாதனை: சித்தாந்தியின் கொள்கையிலே உள்ள வசீகரம் நிகழ்கின்ற, நிகழக்கூடிய அனைத்தையுமே அவனது கொள்கையால் விளக்க முடிகிறது என்பது: நிகழக்கூடிய அனைத்தையுமே ஜீரணிக்கக் கூடியவாறு அமைந்த கொள்கையை நிகழ்கின்ற எதுவுமே பிரச்சினைக்குட்படுத்தாது. எதுவும் அதற்கு எதிரான சாட்சியாகாது. மாறாய் எல்லாம் அதன் உண்மையைப் பலப்படுத்துவது போலத் தோன்றும். சொற்களின் தெளிவின்மையால் எல்லாவற்றையும் அடக்கும் இயல்பு வரும். பிற உபகதைகளும் பிழைகளைச் சமாளிக்க வரும்.

'வருகிற ஆனியிலிருந்து 18 வருடம் வியாழதிசையில் இவன் நல்லாயிருப்பான்': இதைப் பொய்யென்று எப்படிக் காட்டலாம்? நல்லாயிருப்பான் என்பதற்குள் எது அடங்காது? சனியன் எந்த வீட்டில் இருக்கிறான் என்பதைப் பார்க்க வேண்டாமோ? பிறந்த நேரத்தை யார் கணித்தார்கள்? சாத்திரம் பிழைக்காது; சாத்திரி பிழைத்துக் கொள்வான்.

O

நமது பிழைகளைக் களைந்து முன்னேறவேண்டுமானால் விமர்சனம் அவசியம். பிழையைக் கண்டுபிடிக்கிற போது ஒருபடி முன்னேறுகின்றோம். தெளிவற்ற பொதுக் கூற்றுக்கள், பக்தி, மானம், துரோகம் என்று பார்வையை மழுங்கடிக்கும் சொற்கள், வேறுபாட்டை விரோதமெனக் கொள்ளும் பார்வை, பிறருக்குக் காட்டாது நமக்குள்ளே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரகசியமாய் வைத்திருக்க வேண்டும் என்னும் தேவை – இவையெல்லாம் விமர்சனத்தைக் கடினமாக்கும்.

சொல்வதைத் தெளிவாகச் சொல்வதும், பிறர் அறிந்து கொள்ளும்படி உரக்கச் சொல்வதும், எம்மை விமர்சிக்கும்படி பிறரை ஊக்குவித்தலும், விமர்சனத்துக்குத் தடையாககூடிய பயம் போன்ற இடர்களை நீக்குதலும் அறிவுபூர்வமான சமுதாய அமைப்பிற்கு இன்றியமையாதன. இவற்றுக்கிடமில்லாத சமுதாயத்தை வேண்டுவோர் சித்தாந்தப் போக்குக் கொணரும் எல்லா விளைவுகளுக்கும் தயாராயிருத்தல் வேண்டும்.

## இறந்து போய்விட்ட உனக்கு...

– நேரிழை –

நினையாத ஓர் கணத்தில்
நேர்ந்து விட்டது
உன் சாவு
பசும் வெளிகளுடும்
மந்தைகள் மேய்கின்ற
புல் நிலங்களுடும்
தலைசாய்த்துக் குலையீனும்
வாழைத் தோட்டங்களினூடும்
சூரியக் கதிர் மின்னும்
வாய்க்கால் நீரினூடும்
நின் –
காலடிகளைத் தொடர்ந்திருந்தேன்
புலர்ந்துவிட்ட பொழுதொன்றில்
புள்ளினங்கள் வாய் மூட,
இடியொன்று –
விண்ணிலின்று பூமிக்கு
இடம் பெயர,
காற்றும் வீசமறந்து
மௌனித்த காரணம்,
நான் அறியா அக்கணம்,
மௌனமாய்.....
நீ –
இறந்திருந்தாய் !
நின்னுடலை
நான் –
பார்த்து நின்றேன்
விழிமூடி,
சுவாசம் மறந்து,
நீ –
மண்ணை அணைத்து
கிடந்த கோலம்...
நெற்றி பிளந்து,
குருதி தெறித்து,
துடியாத இதயத்துடன்
நிலத்திடை கிடந்த...
நின்னுடலை
நான் –
பார்த்து நின்றேன்
நெஞ்சு பொறுக்குதில்லையே,
நூறுடன் ஒன்றாய் விட்ட
நின் –
சாவை நினைக்கையிலே
மாதங்கள் உருண்டோடி
வருடம் மூன்று ஆனாலும்
உன் முகம்
நினைத்த கணம்
கண்ணீர் பெருகிடுது
ஆழமான காயமொன்றாய்
என் –
இதயத்தில் அழுந்திவிட்டாய்...
தொட்டுப்பார்க்கும் போதெல்லாம்
சுருக்கென்று வலித்திடுது
நினையாத ஓர் கணத்தில்
நேர்ந்துவிட்டது
உன் சாவு !
எனினும் –
வசந்த காலத்தில்
பொன்மஞ்சள் முகம் காட்டும்
தோட்டம் நிறைந்த
சணல் பூக்களிலும்,
ஆடிமாத குளிர்பனிக்காற்றின்
மெல்லிய ஸ்பரிசத்திலும்
நின்னை –
நான் உணர்கிறேன்
அதிகாலை –
கதிர் விரிக்கும் சூரியனிலும்
புல்லின் இதழோரம்
பூத்து நிற்கும் பனித்துளியிலும்
உன்முகம் கண்டு
ஆறுதல் கொள்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மெல்பன் காற்று

'மெல்பன் காற்று' பெருந்தொகையான வாசகர்களால் விரும்பிப் படிக்கப்படுகிறது என்பதை அறிவது மிக்க உற்சாகத்தைத் தருகிறது.

மெல்பன் காற்றில் எழுதப்பட்ட விஷயங்கள் பற்றிச் சாதகமாகவும் பாதகமாகவும் அபிப்பிராயங்களையும் கேட்க முடிகிறது. பலர் கடிதங்கள் வாயிலாகவும் அபிப்பிராயங்கள் தெரிவித்திருக்கிறார்கள். எல்லோருக்கும் நன்றி.

முதலாவது இதழில் எழுதிய ஒரு விஷயத்தை மீண்டும் இங்கு ஞாபகப்படுத்துவது நல்லது. உலகில் எந்த இருவரும் அச்சொட்டாக ஒரே மாதிரிச் சிந்திப்பதில்லை. உலகில் எத்தனை மனிதர்களோ அத்தனை கருத்துக்கள். சிந்தனையைத் தூண்டுவதும், கருத்துப் பரிவர்த்தனைக்கு வழிவகுப்பதும் பத்திரிகைகளினதும் எழுத்தாளர்களினதும் பணி. போற்ற வேண்டியதைப் போற்றுவதும், கண்டிக்க வேண்டியதைக் கண்டிப்பதும் பத்திரிகையின் உரிமை மட்டுமல்ல, கடமையுமாகும்.

கருத்துக்கள் சந்திக்கும் போது அங்கே தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு இடமில்லை. முரணான கருத்துக்களையும் மதிக்கும் பக்குவம் வாயுபகவானுக்கு உண்டு (அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாதவிடத்தும் கூட.) உங்கள் கருத்துக்களைச் சுருக்கமாக எழுதினால் அவையும் இப்பகுதியில் சேர்த்துக் கொள்ளப்படும்.

*

'ராகவன்' என்ற அன்பர் எழுதியுள்ள கடிதம் கீழே பிரசுரமாகிறது. இடச் சிக்கனம் கருதி, அவரது நீண்ட கடிதத்தின் சில பகுதிகளே இங்கு இடம் பெறுகின்றன.

''ஆலமரத்தின் கீழ் உள்ள கோயிலும் பெரிய கட்டட கோயிலும் ஒன்றாய் இருந்தால் தென் இந்தியாவில் சில கோயில்கள் பிரபலமடைந்து இருக்காது. (ஆலமர நிழலில் எழுந்த லிங்கங்களுக்கு எழுப்பிய கோயில்கள்தான் பிரபல்யம் அடைந்தவை என்பது வேறுவிடயம்). ஆனால் சரித்திரத்தில் எழுதப்பட்டவை பெரிய கோயில்களே அன்றி ஆலமரக் கோயில்கள் அல்ல. வாயு பகவான் வக்கிர துண்டரை துணைக்கு இழுக்க வேண்டாம்.

(வாயுபகவானின் குறிப்பு: கோயில்கள் பிரபல்யத்துக்கல்ல மனமுருகி வழிபடவே)

பல கஸ்டங்களுக்கு மத்தியில் தமிழில் வெளிவரும் மரபில் ஐந்து பக்கங்கள் வாயுபகவானின் gossip க்கு ஒதுக்குவது பத்திரிகையின் வியாபாரத்தைக் கூட்டலாம். ஆனால் தரத்தைக் கூட்டாது.

வாயுபகவானின் சில கூற்றுக்கள் ஆற்றாமையை வெளிப்படுத்துவனவோ என ஐயுற வேண்டியுள்ளது. வாயுபகவானுக்கு துணிவிருந்தால், முதுகெலும்பிருந்தால் இதைப் பிரசுரிக்கவும்''.

– ராகவன்.

ராகவனின் அபிப்பிராயங்களுக்கு நன்றி. ராகவன் மேலும் தனது கடிதத்தில், மெல்பன் காற்றில் வரவேண்டுமெனக் கேட்டுப் பற்பல விஷயங்களை எழுதியுள்ளார். இந்த வகையில், மெல்பன் காற்று தொடர்ந்து வரவேண்டுமென்று அவர் விரும்புகிறார். அதே வேளை, அதில் வந்த சில விஷயங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவருக்குப் பிடிக்காமலும் உள்ளன. இதுதான் நயதி, யதார்த்தம். இதைத் தவிர்க்க முடியாது. இப்படித்தான் மெல்பன் காற்று இருக்கும். ஏனென்றால் எல்லோரும் ஒரே மாதிரிச் சிந்திப்பதில்லை. ஆனால் மாறுபட்ட அபிப்பிராயங்களும் கௌரவமாக வரவேற்கப்படும்.

*

ஹவாயிலிருந்து வந்த இந்துச் சாமியார் பற்றிக் கடந்த இதழில் வெளியான குறிப்புக்கள் சம்பந்தமாகச் சிலர் கருத்துத் தெரிவித்தனர். முக்கியமாக வலியுறுத்தப்பட்ட கருத்து, 'தவறு இங்குள்ளவர்கள் மேலல்ல'' என்பதாகும். யார் மீதும் தவறு கண்டுபிடிப்பதல்ல இது எழுதப்பட்டதன் நோக்கம்.

*

கடந்த இதழில், கோவில் நிதிக்கு Dinner Dance நடாத்துவது பற்றி ஒரு குறிப்பு வெளியாகியிருந்தது. இது பற்றி Clayton South ஐச் சேர்ந்த திரு. என். இந்திரன் தெரிவித்துள்ள அபிப்பிராயம் : '' கோவில் கட்டட நிதிக்காக ஒரு சிலர் எப்படியாவது பணம் சேர்க்கவேண்டும் என்று முயற்சி செய்துகொண்டு இருக்கும் போது, மற்றும் பலர், யாராவது கோவில் கட்டட்டும், தாம் நாரதர் போல் கிண்டிவிட்டு, கோவில்களுக்குப் போய் வணக்கம் செய்துவிட்டு பிரசாதத்தை தவறாமல் முன்னின்று வாங்கி வந்தால் போதும் என்று நினைக்கின்றார்கள்.''

வாயுபகவான் : இந்திரனின் அபிப்பிராயத்துக்கு மதிப்பளிக்கின்றேன். ஆனால் கடந்த இதழில் வந்த கேள்வியை வேதனையுடன் என்னிடத்தில் கேட்ட நண்பரிடத்திலுள்ள மதிப்பு எனக்கு குறையவில்லை. (அவர் பிரசாதம் வாங்கிச் சாப்பிடுபவராக இருக்கலாம்!) அபிப்பிராய பேதம், கோயில் கட்டவேண்டுமென்பதில் அல்ல. ''எப்படியாவது பணம் சேர்க்கவேண்டும்'' என்ற வார்த்தைகளில்தான்..

Victorian Arts Centre [illegible] போவதானால், கைக் குழந்தைகளைக் கொண்டுபோக முடியாது. எமது கலைநிகழ்ச்சிகளில் நாங்கள் இந்தத் தடையை விதிப்பதில்லை. பிள்ளைகள் அழுது குளறி, அருகிலுள்ளவர்களுக்குத் தொல்லையாகவும், குளப்பமாகவும் மாறாதவரை, பிள்ளைகள் வருவதில் ஒரு கெடுதலும் இல்லை. ஆனால், பெற்றோருக்கு ஒரு கடமையுண்டு: அழுது கூக்குரலிடும் குழந்தையை மண்டபத்துக்கு வெளியே கொண்டு சென்று ஆற்றுப்படுத்துவதையாவது செய்யவேண்டாமா?.

*

மெல்பனிலுள்ள இசைத் திறனைச் சந்தேகத்துக்கு இடமின்றி எடுத்துக் காட்டும் வகையில் அண்மையில் நடந்த மூன்று நிகழ்ச்சிகள் பொங்கல் விழா, இன்னிசை மாலை, பாரதி விழா. பாரதி விழாவில், பாரதியின் இனிய பாடல்களைக் கேட்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. இன்னிசை மாலை மிகவும் கட்டுக்கோப்பான முறையில் நடைபெற்ற நிகழ்ச்சி. பொங்கல் விழாவிலும், இன்னிசை மாலையிலும் சுயமாக எழுதி, இசையமைக்கப்பட்ட பாடல்களும் இடம் பெற்றமை வரவேற்கத்தக்கது.

*

'பொப்' இசையும், 'டப்' இசையும், வர்ணம் காட்டிச் 'சட்'டென மறையும் மத்தாப்புப் போன்றவை. கர்நாடக இசை சாசுவதமானது. மனதில் நிலையான இடம் பிடிப்பது. ரம்மியமானது. மெல்லென வர்டும் தென்றல் போன்றது. மனதுக்கு அமைதியையும் ஆனந்தத்தையும் தருவது. அது இந்தியக் கலாச்சாரத்தின் உன்னதமான சொத்து.

கர்நாடக இசை இன்னும் 'சிறுபான்மையினரின் இசை'யாகவே இருந்து வருகிறது. கர்நாடக இசையை அறியவும், நயக்கவும் தம்மைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தயாரித்துக்கொள்ள வேண்டுமென்ற விருப்பம் கொண்டவர்கள் நிறையப் பேர். கர்நாடக இசை, தரம் கூடியது - தமக்கு எட்டாதது என்று நினைப்பவர்களும், கடினமானது அல்லது தூக்கம் போடுவது என்று நினைப்பவர்களும் இருக்கிறார்கள்.

இவர்கள் எல்லோருடைய நலன் கருதியும், கர்நாடக இசையை நயப்பதற்கு எல்லோரையும் ஊக்குவிக்கும் வகையிலும், 'கர்நாடக இசையை நயத்தல்' பற்றி எளிமையான ஒரு பயிற்சித் தொடரை மெல்பனில் நடாத்துவதற்குச் சில முயற்சிகள் நடப்பதாக அறிய முடிகிறது. இது மிகவும் நல்ல விஷயம். கர்நாடக இசையைப் பாடவும், வாத்தியங்களில் மீட்கவும் பயில்வதற்குத் தேவைப்படுவது போன்ற நேரமும், உழைப்பும் இதற்குத் தேவையில்லை. நயக்கவும் ரசிக்கவும் பயிலுவது இலகுவானது. மகிழ்ச்சியை எய்துவதற்கு உதவும் ஒரு பயிற்சி! இந்தத் திட்டத்தில் பெருந்தொகையானோர் கலந்து கொண்டு பயன் பெறவேண்டும்.

*

தமிழர்தம் பிள்ளைகளின் வாய்களில் தமிழ் நுழைய வேண்டுமென்னும் ஆதங்கம் கொண்ட தமிழர்களுக்கு, மெல்பனில் நடந்து முடிந்துள்ள பாரதி பாடல், பேச்சுப் போட்டிகள் மகிழ்ச்சியைத் தந்திருக்கும். நல்ல முயற்சி மட்டுமல்ல ; நல்ல முறையில் நடாத்தப்பட்டதுமாகும். பாடசாலைகளில் sticker அல்லது badge வாங்கினாலே குதூகலமடையும் எமது பிள்ளைகளைத் தங்கப் பதக்கங்களும், வெள்ளிக் கிண்ணங்களும் நிச்சயமாகக் கவரவே செய்யும்.

*

தென்னாபிரிக்காவினுள் புகுந்து மூலவளங்களைச் சுரண்டிக் கொழுத்ததுடன் நில்லாது, அந்த மண்ணின் சொந்தக்காரர்களான கறுப்பர்களை மிருகங்களிலும் [illegible]

உருக்குலைத்து வந்துள்ள காட்டுமிராண்டி அரசுதான் அங்குள்ள வெள்ளையர் அரசு. இந்தக் காட்டுமிராண்டி இன ஒதுக்கல் அரசை பிரிட்டன், அமெரிக்கா போன்ற மேற்கத்தைய அரசாங்கங்கள் அவ்வப்போது 'செல்லமாக' கடிந்து கொள்வதும், சில 'சில்லறை' நடவடிக்கைகளை எடுப்பதும், சாட்டுக்கும் தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தத்திலும்தான் என்பது பகிரங்க ரகசியம். (வளை குடா போல் 'சீரியஸ்' விவகாரமில்லை !) ஆனாலும், அநியாயத்துக்கு எதிராக அங்கு தொடர்ந்து நடைபெற்றுவரும் எழுச்சிமிக்க மக்கள் போராட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாத அரசாங்கம், கறுப்பர்களும் காணி வாங்கலாம், கறுப்பினப் பிள்ளைகளுக்குப் பாடசாலைகளில் அனுமதி போன்ற 'சட்டச் சீர்திருத்தங்களை'க் கொண்டுவரப் போவதாகத் திருவாய் மலர்ந்துள்ளது.

இந்தப் 'பெரிய மனசை' மேற்கத்தைய அரசாங்கங்கள் 'ஆகா.. ஓகோ' என்று போட்டி போட்டுப் பாராட்டின. எமது அவுஸ்திரேலிய அரசாங்கமும் எல்லோரையும் முந்திக் கொண்டு தென்னாபிரிக்காவுடன் உறவு கொண்டாடத் துடியாய்த் துடிக்கிறது. (இது போல்தான் வளைகுடா விஷயத்திலும், கப்பல் அனுப்ப அவசரப்பட்டு, ஜோர்ஜ் புஸ் எப்பொழுது ரெலிபோன் பண்ணுவார் என்று ரெலிபோனுக்கருகே பொப் ஹோக் காத்துக் கிடந்ததாக ஒரு 'கதை'!)

உறுதிமிக்க கறுப்பின மக்களின் தலைவர் நெல்சன் மண்டெலாவின் மனதில் ஒரு சலனமும் இல்லை. ''பழைய அநீதிகளைத் திருத்த இப்பொழுது சட்டம் கொண்டுவரப் போவதற்காக நான் அவர்களுக்கு நன்றி சொல்லப்போவதில்லை'' என்றார் அவர்.


வாயபகவான்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net










தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ஊ




ஊஞ்சல்



ஊதல்





ஊசி



ஊமத்தை

www.tamilarangam.net

# ஏழு ஸ்வரங்களுக்குள்



*ராம்நாத்*

(3)

'' கங்கணபதே நமோ நமோ'' என்று கம்பீரமாகப் பாட ஆரம்பிக்கிறார் டி.கே. ஜெயராமன். முதல் வரிசையில் உட்கார்ந்து ஜோராக ரசித்துக் கொண்டிருக்கும் தாத்தா அருகில் உள்ள பேரனிடம் கேட்கின்றார் ''என்னடா மணி, இது என்ன ராகம் தெரிகிறதா?''... பத்து வயது மணி சொல்கின்றான் ''இரு தாத்தா சொல்லிவிடாதே... நான் இந்த ராகத்தை முன்பே கேட்டிருக்கேன்... யோசித்து சொல்றேன்''... மணி தன் மூளையை கசக்கிக் கொள்கிறான். பளீரென அவன் முகம் பிரகாசிக்கிறது. ''தெரியும் தாத்தா, இது 'வாதாபி கணபதி' ராகம்தானே?''.

தாத்தா, ''பலே, பலே, கண்டு பிடித்து விட்டாயே! ராகத்தின் பெயர் ஹம்சத்வனி. அடுத்த முறை ராகத்தின் பெயரையும் சொல்லனும்'' எங்கிறார். சிறுவன் மணி ஹம்சத்வனி ராகத்தின் பரிணாமத்தைப் புரிந்து கொண்டது எப்படி? அவன் முன்பே இந்த ராகத்தில் வேறு ஒரு பாடலை கேட்டிருக்கிறான். அப்பாடலுடன் இணைத்து ராகத்தைக் கண்டு பிடித்துவிட்டான்! ராகங்களைப் பிடிப்பது பல பேருக்கு மிகவும் பிடித்தமான பொழுது போக்கு. இதற்காகவே கச்சேரிகளுக்கு வருவார்கள் பலர். இவ்வாறு பலரை வசீகரிக்கும் ராகங்களைப் பற்றி சிறிது பார்ப்போமா?.

கர்னாடக இசையின் அஸ்திவாரமே ராகங்களைக் கொண்டது. 'ஸ ரி க ம ப த நி' என்ற ஏழு ஸ்வரங்களுள் பன்னிரெண்டு ஸ்வரஸ்தானங்கள் உள்ளன. இந்த ஸ்வரஸ்தானங்களை இன்னும் இருபத்திரண்டு அலைவரிசையாகவும் பிரித்துள்ளனர். இதனையே 'ஸ்ருதி' என்றும் முன்னோர்கள் குறிப்பிட்டு வந்தனர். (இன்று கூறப்படும் 'ஸ்ருதி' என்பதோ 'ஸ ப ஸ' வை குறிக்கின்றது- இதனையே சென்ற இதழில் பார்த்தோம்)

இந்த பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்களை விதவிதமாக அமைத்தால் பல ஸ்வரக்கோலங்கள் (Scales) உருவாகின்றன. இந்த ஸ்வரக்கோலங்கள் வெகு காலமாக பாடப்பட்டு, மெருகேற்று தனித்தனி உருவங்களை அடைந்துள்ளன. இவ்வுருவங்களையே ராகங்கள் என்று கூறுகிறோம். எனவே ராகம் என்பது வெறும் ஸ்வரக்கோலம் மட்டுமல்ல; அவற்றுக்கு உருவம் உண்டு; ஒவ்வொரு ராகமும் ஒரு குறிப்பிட்ட உணர்வையும் தூண்டிவிடக் கூடியது. உதாரணமாக, ஹம்சத்வனி ராகத்தை எடுத்துக் கொண்டால், இது மிக கம்பீரமான ராகம்; இதனைக் கச்சேரியின் ஆரம்பத்தில் பாடினால் கச்சேரி களை கட்டி விடுகிறது; அதே சமயம் சுபபந்துவராளி ராகம் சோக உணர்வைத் தூண்டி விடுகிறது; பெருந்தலைவர்கள் மறைந்து விட்டால் இந்த ராகத்தை ரேடியோவில் கேட்கலாம்...

கர்னாடக சங்கீதத்தில் நூற்றுக் கணக்கில் ராகங்கள் பழக்கத்திலுள்ளன. இவற்றை எவ்வாறு பிரிக்கலாம்?, ஒவ்வொன்றுக்கும் உள்ள தொடர்பு என்ன?, போன்ற கேள்விகள் எழலாம். இக் கேள்விகளுக்குப் பதிலளிக்க வெங்கடமுகி என்ற முன்னோரின் ஆராய்ச்சியைப் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டும். இவர் ராகங்களின் இலக்கணத்தை விஞ்ஞான ரீதியில் அமைத்துள்ளனர். இதன்படி ராகங்களை மேளகர்த்தா ராகங்கள் (Parent ragas) என்றும் ஜன்ய ராகங்கள் (Child ragas) என்றும் பிரிக்கலாம்.

கர்த்தா ராகங்கள் 'ஸ ரி க ம ப த நி' ஸ்வரங்கள் அனைத்தையும் அந்த வரிசையிலேயே கொண்டுள்ளன. பன்னிரெண்டு ஸ்வரஸ்தானங்களை இங்குள்ள படத்தின்படி (படம் 1) குறிப்பிடுவோம்.

படம் 1.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஸ | ரி1 | ரி2 | க1 | க2 | ம1 | ம2 | ப | த1 | த2 | நி1 | நி2 | ஸ. |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 1 |

இந்த ஸ்வரங்களை வைத்துப் பல ஸ்வரக்கோலங்கள் அமைப்போம்; ஒவ்வொன்றும் ஏழு ஸ்வரங்களைக் கொண்டிருக்க வேண்டும்; படத்திலுள்ள வரிசையிலும் இருக்க வேண்டும்.

1) ஸ ரி1 ரி2 ம1 ப த1 த2
2) ஸ ரி1 ரி2 ம1 ப த1 நி1
3) ஸ ரி1 ரி2 ம1 ப த1 நி2
4) ஸ ரி1 ரி2 ம1 ப த2 நி1
5) ஸ ரி1 ரி2 ம1 ப த2 நி2
6) ஸ ரி1 ரி2 ம1 ப நி1 நி2 .

இவ்வாறு எழுதிக்கொண்டு போனால், 72 ஸ்வரக்கோலங்கள் வரும். 'ரி1 ரி2' சேர்ந்து வரும்போது 'ரி2' யை 'க' என்று பாட வேண்டும். அதேபோல் 'த1 த2' சேர்ந்து வரும்போது 'த2' வை 'நி' என்று பாடவேண்டும். இவையே மேளகர்த்தா ராகங்கள் என்று கூறப்படுகின்றன. 72 மேளகர்த்தா ராகங்களில் இன்று பல பழக்கத்தில் உள்ளன. (உ+ம் :- சங்கராபரணம், தோடி, கலியாணி, ஹரிகாம்போதி...) சில ராகங்களோ ஸ்வரக்கோலங்களாகவே நின்று விட்டன; இவற்றிற்கு உருவங்கள் முழுமையடையவில்லை. இவற்றை அபூர்வ ராகங்கள் என்றும் கூறுகின்றோம்.

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

*வீடியோவும் பக்தனும்*

கடந்த இதழில் வீடியோப் படமெடுக்கிறவர்களை நக்கலடித்துள்ள பெருமகனார், ஆலாவரணமாகத் தமிழ் எழுதுவதில் செலுத்திய அக்கறையை விஷயத்தின் மேல் செலுத்தவில்லை. வீடியோப் படப்பிடிப்பாளர் ஒரு தொழிலாளி. நிகழ்ச்சியை ஒழுங்குசெய்து நடத்துகிறவர்களின் பணிப்பின்படி படமெடுப்பவர். எய்தவனை விட்டுவிட்டு அம்பை நொந்தது என்ன?.

ஒரு விஷயத்தைப் படமெடுக்கிறதென்றால் முன்னால் நின்றுதான் எடுக்கலாம். பின்னால் நின்று எடுக்கமுடியாது. கமராவில் லென்ஸ் என்று ஒரு பொருள் உண்டு. முன்னால் நின்றால் சிலரை மறைக்கவே செய்யும். படமெடுப்பது மனிதன்தான் : ஆவியல்ல !. நான் சொல்வது பொய் என்றால், எழுதியவர் கமரா பிடிக்கத் தெரிந்தவரானால், தானே செய்து பார்க்கட்டும். கோயிலில் பக்தியுடன் நின்றால் இறைவன் தெரிவான். அல்லது வீடியோக்காரன்தான் தெரிவான்.

ராஜ், Cheltenham, Vic.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நடுநிசியில் கலை நிகழ்ச்சிகள் .

எமது கலை நிகழ்ச்சிகள் நடுநிசி வரை நீட்டியடிக்கப்படும் நிலைமை இன்னும் மாறவில்லை. (அளவாகவும், அழகாகவும் நடந்தேறிய நிகழ்ச்சிகளும் உள்ளனதான்). ஆர்வத்துடன் நிகழ்ச்சிகளுக்கு வரும் பார்வையாளர்களைச் சலிக்கவும், களைக்கவும் வைப்பதில் யாருக்கு என்ன லாபம்? பொதுமக்களின் ஆர்வமும், நிகழ்ச்சியின் சிறப்பும்தான் குன்றிப் போகிறது. பார்வையாளர்கள் இறுதிவரை இருந்து பார்க்கவேண்டும் என்று இங்கு சட்டம் இல்லைத்தானே. பாதிப்பேர் புறுபுறுத்துக் கொண்டு இடைநடுவிலேயே எழுந்து போய்விடுகிறார்கள். இறுதியில் நடக்கும் அருமையான நிகழ்ச்சிகளைப் பார்க்க கதிரைகள்தான் மிஞ்சுகின்றன.

நிகழ்ச்சி அமைப்பாளர்கள் இதை தமது அடுத்துவரும் நிகழ்ச்சிகளில் கவனத்துக்கு எடுப்பார்களா?.

மோகன், Mill Park, Vic.

## பிறந்தநாள் வாழ்த்து தேவையா? .

தமிழ் தாகம் தீர்க்க வெளிவரும் பத்திரிகையின் அரைப் பக்கத்துக்கு பிறந்தநாள் வாழ்த்துப் போடவேண்டுமா? பிறந்தநாள் கொண்டாடும் குழந்தைகளின் குடும்பங்கள் தவிர்ந்த ஏனையோருக்கு அவ்வளவும் தண்டக்காசுதனே?

இனிமேல் அந்த இடத்தில் 4 குமரிகள், குமரங்களது சாதகக் குறிப்பைப் போட்டாலும் குமருகள் கரையேறிய புண்ணியமென்று தண்டச் செலவை சகிக்கலாம்.

ராகவன், Melbourne .

### *Well wishes from a reader*

The quality and standard of 'Marapu' are far beyond my expectations. I am very glad to see the effort put in by you to keep up our culture and language in a foreign country. I congratulate you on my behalf and the behalf of other Tamils.

I got the feeling that I was in Jaffna once again, while I was reading 'Marapu'. It took me some time to come back to reality once I finished it.

Suba, Engadine, NSW.

ஆசிரியர் குறிப்பு : 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' பகுதிக்கு எழுதுபவர்கள் புனைபெயர்களைப் பயன்படுத்தலாம். ஆனால் மரபு ஆசிரியருக்குத் தமது உண்மையான பெயர், முகவரி, தொலைபேசி எண் ஆகிய விபரங்களை அறியத்தருதல் அவசியம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




**மாவை நித்தியானந்தன்**

புதிய 'மெல்வே' வீதிப் படப் புத்தகமொன்றை வாங்கிக்கொண்டு புத்தகசாலைக்கு வெளியே வந்தான் சந்திரசேகரம்.

~

கொழும்பில் கருணாநாயக்க மாவத்தையைத் தேடி அலைந்தது அவனுக்கு நல்ல ஞாபகமிருக்கிறது.

கொள்ளுப்பிட்டிக்கும் பம்பலப்பிட்டிச் சந்திக்குமிடையே கடும் வெய்யிலில் இரண்டு முறை நடந்து களைத்த பின், கடைசியாக ஒரு வாழைப்பழக் கடைக்காரரின் காருண்யத்தால் கருணாநாயக்க மாவத்தையைக் கண்டுபிடித்ததும், இதற்காக அரை நாள் செலவழிந்ததும் மனதில் இன்னும் பசுமையாக இருக்கிறது.

மெல்பனுக்கு வந்து, 'மெல்வே' என்ற வீதிப்படப் புத்தகத்தை முதன்முதலில் கண்டபோது ஆச்சரியத்தால் வாயெல்லாம் பல்லாக நின்றான். ''நல்ல சாமானெல்லோ'' என்று சொல்லிக் கொண்டான். ''சின்னச் சின்னக் குறுணி ஒழுங்கையளைக் கூடப் படமாய்க் கீறியிருக்கு.''

அடுத்த நாள், கடையில் 'மெல்வே'ப் புத்தகத்தைக் கண்டு, விலையைக் கேட்டபோது அவனுக்கு வாங்க மனம் வரவில்லை. இலங்கைக் காசில் பெருக்கிப் பார்த்தால், கிட்டத்தட்ட அவனுடைய மாதச் சம்பளத்துக்கு வந்தது.

இரண்டு நாட்கள் கழித்து, நண்பனொருவன் பழைய மெல்வேப் புத்தகமொன்றைக் கொண்டுவந்து அன்பளிப்பாகக் கொடுத்தபோது சுவீப் அடித்த புழுகம் அவனுக்கு. புதுப் புத்தகத்தை வாங்காமல் விட்ட புத்திசாலித்தனத்தை நினைத்து தன் முதுகிலே தட்டிக் கொண்டான். சில பக்கங்கள் கிழிந்தும், சுருண்டும் இருந்தாலும், அது பெரிய பிரச்சினையாகத் தெரியவில்லை.

~

இந்த மண்ணில் கால்வைத்த பின், சந்திரசேகரத்துக்குக் காத்திருந்த முதலாவது பாரிய வேலை, வீடு தேடுவது தான். எஸ்டேட் ஏஜண்ட் தந்த விலாசங்கள் பல திசைகளிலும் சிதறிக் கிடந்தன. 'மெல்வே'ப் புத்தகம்தான் ஒரே துணை. மெல்வே இல்லாவிட்டால்... என்று எண்ணிப் பார்த்தபோது, வாழ்க்கையே ஸ்தம்பித்து விடும் போல் இருந்தது.

ஆனால் 'மெல்வே' சில பிரச்சினைகளை ஏற்படுத்தியதும் உண்மைதான். எங்கும் நடந்தே செல்ல வேண்டியிருந்த நிலையில், பாரமான இந்தப் புத்தகத்தையும் நாள் முழுதும் சுமந்து திரிந்து கைகள் வலித்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அத்துடன், படத்தை வைத்துத் திசைகளைக் கண்டுபிடிப்பது சந்திரசேகரத்துக்கு ஒரு இலகுவான கலையாகப் படவில்லை. ஒவ்வொரு சந்தியிலும் நின்று புத்தகத்தைத் தலைகீழாகவும், சரிவாகவும் பிடித்துத் திசைகளைத் தீர்மானிக்க வேண்டியிருந்தது. வலமும் இடமும் மீண்டும் மீண்டும் பிழைத்தன. இதனால் நீண்ட தூரம் நடந்து போவதும் பிறகு பிழையை உணர்ந்து அவ்வளவு தூரத்தையும் திரும்ப நடப்பதும் அன்றாட சம்பவமாகிவிட்டது. தன்னுடைய திறமையின்மையை நினைத்துச் சந்திரசேகரத்துக்குத் தன்மீதே எரிச்சல் வந்தது.

இதைவிட, பொது இடங்களிலும் சந்திகளிலும் நின்று வீதிப் புத்தகம் பார்ப்பதில் அவனுக்கு விருப்பமில்லை. கூச்சமாகவும் இருந்தது. போகிறவர்கள் வருகிறவர்கள் எல்லாம் தன்னையே பார்ப்பது போன்ற உணர்ச்சி. அவர்கள் சிரிக்கிறார்களா என்றும் அடிக்கடி கடைக் கண்ணால் பார்த்துக் கொள்ளுவான்.

~

காலம் ஓடியது. ஊரும் பழகிவிட்டது. சந்திரசேகரம் settle down பண்ணிவிட்டான். வேலை கிடைத்து விட்டது. காரும் வாங்கிவிட்டான்.

காரில் போகும்போது 'மெல்வே' பார்ப்பதும், நடந்து போகும்போது 'மெல்வே' பார்ப்பதும் வித்தியாசமான கலைகள் என்பதைக் கண்டுபிடிக்க அவனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. சந்திகளில் நின்று தயங்கியதால் மற்றவர்கள் 'ஹோர்ன்' அடித்ததும், விரலைக் காட்டித் திட்டிவிட்டுப் போனதும் வேதனையாக இருந்தது. சந்திரசேகரம் ரோஷக்காரன். ''பொறுமையில்லாத நாய்கள்'' என்று கடிந்து கொண்டான்.

இனிமேல் கவனமாக இருக்கவேண்டுமென்று தீர்மானித்து, 'மெல்வே' பார்த்துத் திசை சொல்லும் பொறுப்பு இனிமேல் மனைவியைச் சார்ந்தது என்று ஒப்பந்தமானது. அவளோ இதுவரை 'மெல்வே'யைத் தொட்டதில்லை. 'வெளி வேலையெல்லாம் கணவனுக்கு : உள் வேலையெல்லாம் தனக்கு' என்ற பாரம்பரியத்தில் ஊறிய எளிமையான தமிழ்ப் பெண்.

நல்ல இடமாகப் பார்த்து ஒரு ஓரத்தில் காரை நிறுத்திவிட்டு, 'மெல்வே' பார்க்கும் விதத்தை அவளுக்கு உடனேயே சொல்லிக் கொடுத்தான் சந்திரசேகரம். போர்க்களத்தில் அருச்சுனனுக்கு உபதேசம் செய்த கண்ணனைப்போல். அவளும் தலையசைத்தாள்.

முதலாவது திருப்பத்திலேயே, இடப் பக்கத்துக்குப் பதில் வலப் பக்கமென்று சொல்லிவிட்டு, கார் திரும்பிக் கொண்டிருக்கும் போதுதான் ''மற்றப் பக்கம், மற்றப் பக்கம்'' என்று கத்தினாள்.

இப்படிப்பட்ட பிழையை விடாமல் படம் பார்க்கும் முறையைச் சந்திரசேகரம் அவளுக்குச் சொன்னான். ஆனால் அவளுக்கோ இந்த வித்தை பிடிபடுவதாக இல்லை.

நாட்கள் ஓடின. பயிற்சியும் தொடர்ந்தது. ஏச்சு... வாய்ச்சண்டை... அழுகை... சமாதானம்... எல்லாம் 'மெல்வே'யைச் சுற்றி நிகழ்ந்தன. முன்னேற்றம் மட்டும் அதிகம் இல்லை.

பல சந்தர்ப்பங்களில், திரும்ப வேண்டிய இடத்தைக் கடந்து கார் போன பிறகுதான் ''திரும்ப வேணும், திரும்ப வேணும்'' என்று கத்துவாள். சில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேளைகளில், அவசரப்பட்டு முன்கூட்டியே அவள் கட்டளையிட்டு விடுவதால், கார் உரிய பாதைக்கு முதற் பாதையிலேயே திரும்பி விடும். ''ஒரு அறுப்பும் தெரியாது'' என்று முகத்தைச் சுழித்துப் பல்லை நெருடித் தொடங்கும் சந்திரசேகரம், கார் மீண்டும் சரியான பாதையில் ஓடத் தொடங்கிய பிறகுதான் புறுபுறுப்பதை நிறுத்துவான். திடீர் பிறேக்குகள் போட்டுக் காரைக் குலுக்கியடிப்பதும், அங்குமிங்கும் வெட்டுவதும், அதிவேகத்தில் போவதும், அந்த வேகத்தில் திருப்பங்கள் எடுப்பதும் சந்திரசேகரம் தன் சீற்றத்தை வெளிப்படுத்த உபயோகிக்கும் நுட்பங்களிற் சில. பயத்தால் அவளுக்கு இருதயம் ஸ்தம்பித்துப் போகும். உடல் நடுங்கும்.

சந்திரசேகரமோ தான் அனுபவ ரீதியாகக் கண்டறிந்த 'மெல்வே' பார்க்கும் தந்திரங்கள் அனைத்தையும் ஒன்றும் விடாமல் சொல்லிக் கொடுத்துவிட்டான். அவளுக்கோ இந்தப் பாடங்களெல்லாம் ஆறாம் வகுப்பில் படித்த கணக்குப் பாடத்திலும் பார்க்க வேப்பங்காயாக இருந்தன.

காருக்குள் வரவரச் சண்டையும், அமளியும்தான் கூடிக்கொண்டு வந்தன. சந்திரசேகரம் பொறுமையை இழந்து கண்டபடி திட்டிக் கொட்டினான். அவளும் முற்கோபக்காரி. ''இனிமேல் விடுறேல்லை'' என்று தனக்குள் சபதம் செய்து கொண்டாள். சரிக்குச் சரியாக நின்று எதிர்த்து வாய்காட்டினாள். ''கார் ஓடுறது சுகம். மெல்வே பார்க்கிறதுதான் கஸ்டம்'' என்றாள்.

''நெடுக மூஞ்சையைப் புத்தகத்துக்குள்ளை வைச்சுக் கொண்டிருந்தால், வெளியாலை, றோட்டுப் பெயர்களைப் பார்க்கிறது எப்படி?'' என்று அவன் கத்தினான்.

கடைசியாக ஒருநாள் –

தொலைதூரத்திலிருக்கும் சிநேகிதர் வீட்டில் பிறந்ததினக் கொண்டாட்டம்... இதுவரை இவ்வளவு தூரம் அவர்கள் காரில் போனதில்லை.

வீட்டில் வைத்தே ஒரு மணித்தியாலமாகப் பாதைகள் பற்றிய ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு, எல்லாம் அவளுக்குக் கற்பிக்கப்பட்டன. பிறந்ததினப் பரிசுடன், குதூகலமாகக் காரில் ஏறினார்கள். நன்றாக அலங்காரம் செய்து இருவரும் மிக லட்சணமாக இருந்தார்கள்.

முதல் இரு திருப்பங்களும் கன கச்சிதமாக நடந்தேறின. அடுத்தது அடியோடு பிழைத்துவிட்டது. பெரிய ஐந்து சந்தியொன்றிலே, பிழையான பாதைக்குள் கார் திரும்பி விட்டது. நல்ல பிசியான ரோட்டு. பெரும் சிக்கல். ஏற்கனவே 'லேற்'றாகியும் விட்டது. அவனுக்குக் கோபம் சீறிக்கொண்டு வந்து, வாயால் வெளிப்பாடு கண்டது. ''குழந்தைப் பிள்ளை செய்து போடும். இந்த வெருளியாலை ஏலாது.''

''ஆர் வெருளி, கேக்கிறன்.''

''வெருளி''

''வெருளன்''



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''வெருளி, நாய்''

''என்ன? நாயோ? நான் இனி மெல்வே பாக்க மாட்டன். சொல்லியாச்சு.'' ஓங்காரத்தோடு புத்தகத்தைப் 'பட்'டென மூடி, மடியிலே போட்டாள்.

''அப்ப ஆர் பார்க்கிறது?''

''எனக்குத் தெரியாது அதைப் பற்றி.''

''மண்டைக்குள்ளை ஒண்டுமில்லாத மூதேவி, சனியன்.''

''நான் மூதேவி சனியன். அப்ப நீங்கள்?''

''பொத்தடி வாய்''

''பொத்தடா வாய்''

''எடியேய் நாயே... என்னடி சொன்னனி... சனியனே''

கார் ஓடிக்கொண்டிருக்கும் போதே, எட்டிப் பலமாக அவளுடைய கன்னத்தில் அறைந்துவிட்டான். வாழ்க்கையிலேயே முதன் முதலில் இப்படியொரு சம்பவம். ஓவென்று அலறினாள். வாழ்க்கையே முடிந்துவிட்டது போன்ற உச்சச் சத்தத்தில் கூக்குரலிட்டாள். ''அம்மா அப்பா கூட என்னிலை தொட்டதில்லை'' என்று கத்தினாள்.

அடுத்த கணம்... ''போய்த் துலை'' என்றபடி மடியிலிருந்த 'மெல்வே'ப் புத்தகத்தைத் தூக்கி வெளியே சுழற்றி எறிந்துவிட்டாள். பள்ளிக்கூடத்தில் 'நெற்போல்' விளையாடிய கைகள். புத்தகம் போய்த் தூர விழுந்தது.

பின்னால், கார்ச் சில்லுகள் அதைப் பதம் பார்ப்பதைக் கண்ணாடியூடாகத் தன் கண்களாலேயே பார்த்தான் சந்திரசேகரம். அருமையாகப் பேணிய புத்தகம் – நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு உற்ற தோழன் போல. பேயறைந்தது போல இருந்தது அவனுக்கு. அழுகையும் வந்தது.

காரைத் திருப்பிக்கொண்டு வந்து பார்த்தபோது உருக்குலைந்து போய், ஒன்றுக்கும் உதவாத நிலையில் பரிதாபமாகக் கிடந்தது 'மெல்வே'.

மனைவியோ அடி விழுந்த இடத்தைப் பொத்திப் பிடித்தபடி இன்னும் விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். சந்திரசேகரம் காரை வீடு நோக்கிச் செலுத்தினான். அன்றைய பயணம் முடிந்தது.

'மெல்வே' இல்லாமல் இனிப் பிறந்த தினக் கொண்டாட்டத்துக்குப் போய்ச் சேருவதும் இயலாத காரியம். மனைவிக்குத் தலையிடி என்பதால் வரவில்லை என்று போன் பண்ணினான்.

இது தான் சந்திரசேகரம் புது 'மெல்வே' வாங்க நேர்ந்த கதை. ❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மகமதியரும் பாரதியும்.

— தில்லைக்கூத்தன் —

ஈராக்குக்கு எதிராகப் போர்புரியும் மேற்கத்தைய நாடுகளின் கூட்டணியில் சவூதி அரேபியா, எகிப்து போன்ற முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகள் முக்கிய பங்கு வகிக்கின்ற போதிலும், முஸ்லீம்களுக்கு எதிராக ஒரு பிரசாரம் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாயிருக்கிறது. முஸ்லீம் 'வெறியர்களால்' (fanatics) மேற்கத்தைய நாகரீகத்திற்கு (western civilization) ஆபத்து ஏற்பட்டிருப்பதாக மறைமுகமாகப் பிரசாரம் செய்யும் மேற்குலகச் செய்திச் சாதனங்கள், மேற்கத்தைய நாகரீகத் தொனிகூட வெறித்தனம்தான் என்பதை மறைத்துவிடுகின்றன.

தமிழ்பேசும் மக்களில் கணிசமான தொகையினர் முஸ்லீம்கள். இவர்களது வாழ்வும், வளமும் மற்றைய தமிழ்பேசும் மக்களுடன் பின்னிப் பிணைந்துள்ளன. நவீன தமிழ் கலை, இலக்கியங்களில் இவர்களின் பங்களிப்பு முக்கியமானவை. புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் இலக்கிய மாசிகையான 'அக்கினிக்குஞ்சு'வின் வெளியீட்டுக்கு முன்னின்று உழைப்பவர் இளம்பிறை எம். ஏ. ரஹ்மான். இன்றைய தமிழ்க் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர் எம். ஏ. நுஹ்மான். இவ்விதமாக நிறைய முஸ்லீம்களைக் கூறலாம். தென்னிலங்கைத் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்வோர் முஸ்லீம்கள். இவர்களது மார்க்கம் — இஸ்லாம், வெறித்தனமானதா?

பல நூற்றாண்டுகளாக தமிழ்பேசும் மக்களில் ஒரு பகுதியினர் முஸ்லீம்களாக வாழ்ந்துவந்த போதிலும், மற்றைய தமிழ்பேசும் மக்கள் இஸ்லாத்தைப் பற்றிய உண்மைகளைச் சரிவர அறிந்து கொள்ளவில்லை என்றே கூறலாம்.

ஆனால் நமது மகாகவி பாரதியாரோ மகமதிய மதத்தினை நன்றாக அறிந்தவர். அல்லா (இறைவன்) மேல் பாட்டுப் பாடியவர். மகமதிய சங்கங்களில் உரையாற்றியவர். தனது எழுத்துக்களில் மகமதியர்களைச் சித்திரித்துப் புகழ்ந்தவர்.

இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை என்ற விஷயத்தைப்பற்றி ஒரு முஸ்லீம் சபையின்முன்பு பேசும்போது அவர் கூறினார்,

''எனக்கு முதல் இஸ்லாம் மார்க்கத்தில் அன்பு உண்டானதன் காரணம் பின்வருமாறு :— பல வருஷங்களின் முன்பு நான் ஒரு ஆங்கிலேய பண்டிதர் எழுதிய புஸ்தகமொன்றைப் படித்துக் கொண்டிருந்தேன். அதில் முஹம்மது நபியின் சரித்திரத்தைக் குறித்த சில விஷயங்கள் காணப்பட்டன. அவற்றைப் படித்துப் பார்த்தபோது, நான் அற்புதமுண்டாய் பரவசமடைந்தேன்''.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னொரு இடத்தில் பின்வருமாறு சொன்னார்,

''இடையிடையே நான் என்மனதுக்குள் முஹம்மது நபி (ஸ்ல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களைப்பற்றி சித்திரம் போட்டுப் பார்ப்பது வழக்கம். நடுப்பாலைவனத்தில், நள்ளிரவிலே தனிமணல் வெளியிலே, ஒட்டகையின் மீது தனியாக ஏறிக்கொண்டு போகிறார். அல்லது, அங்கொரு குன்றின்மேல் ஏறி நிற்கிறார். கேள்வியாலும், நெடுங்காலத்து பக்தியாலும், நிகரற்ற அன்பினாலும், ஞானத்தாலும் பக்குவப்பட்ட இவருடைய ஹ்ருதயம் அப்படிப்பட்ட இடத்தில் அல்லாவை நாடுகிறது. வேறு நினைப்புக்கு இடமில்லை. அப்போது அங்கு ஞான ஒளி வீசிற்று; நபி அல்லாவைக் கண்டார். சுகப் பிரம்ம ரிஷிக்கு நேர்ந்த அனுபவமும் முஹம்மது நபிக்கு எய்திற்று.

அங்கமே நின் வடிவமான சுகர் கூப்பிட நீ
எங்கும் ஏன் ஏன் என்ற தென்னே, பராபரமே

என்று தாயுமானவர் பாடியிருக்கிறார்.''

இதன்பின்பு தாயுமானவரின் பாடலின் அர்த்தத்தை முஸ்லீம்களுக்கு விளக்கினார்.

முஸ்லீம்களின் மேலுள்ள பற்றினால், அவர்களிடமிருந்த காலத்துக்குத் தகாத ஆசாரங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தவர் பாரதி. இவை பற்றிய தனதும், தனது முஸ்லீம் நண்பர்களினதும் கருத்துக்களைத் தன் பத்திரிகை மூலமாக வெளியிட்டவர். ஒரு முஸ்லீம் பிரபு மூன்று பெண்களை மணந்ததால் நிம்மதியற்று வாழ்வதாக ஒரு கதையில் சித்திரித்துள்ளார்.

பாரதியார் தனது முஸ்லீம் நண்பர் ஒருவரைப் பற்றி எழுதியுள்ளது, முஸ்லீம்கள் மேல் அவருக்கிருந்த அபிமானத்தைக் காட்டுகிறது.

இரண்டு தினங்களுக்கு முன்பு என்னுடைய முகம்மதிய நண்பர் ஒருவர் என்னைப்பார்க்கும் பொருட்டு வந்திருந்தார். இவர் இஸ்லாம் மார்க்கத்தில் ஆழ்ந்த பற்றுதல் உடையவர். எதிர்காலத்தில் இஸ்லாம் மதம் மிகுந்த மகிமையும் ஒளியும் உடையதாய் உலகத்துக்கு எண்ணிறந்த நன்மைகள் செய்யப்போகிறதென்று இவர் உறுதியாக நம்புகிறார். இவரது நம்பிக்கை நிறைவேறுமென்பதற்கு பல அடையாளங்கள் இக் காலத்தில் உலகமெங்கும் தோன்றுவதால், நானும் இவருடைய கருத்தை அங்கீகாரம் செய்கிறேன். ஆதலால், இவருக்கும் எனக்கும் மிகுந்த நட்பேற்பட்டு வளர்ந்து வருகிறது.

பாரதியார் கூறியவை சிந்தனையைக் கிளறக்கூடியவை.

இஸ்லாம் அன்பையும், சகோதரத்துவத்தையும் போதிக்கின்றது. இஸ்லாம் மதத்தில் பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடு இல்லை. சாதிக்கொடுமை இல்லை. அநீதியைச் சுட்டிக்காட்டினால் மட்டும் போதாது, அதனை அழிக்கவும் வேண்டும் என வற்புறுத்துவதாகக் கூறப்படுகிறது. இது நல்லதுதானே?.

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்கிறது திருமந்திரம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாகன வகைகள்

– எஸ். பொ.

காலநதி பீச்சியடித்து ஓடுகிறது. காலநதி ஓடுவதற்கு வசதி செய்யும் சக்கரங் கள் எவை? சக்கரம் இல்லாத ஓட்டமா?

அப்பையா என்று என்னாலும், பிற்காலத்தில் முகத்தார் என்று பிறராலும் அழைக் கப்பட்ட அவர், காலநதியின் ஓரத்திலே நம்பிக்கையை இழக்காது நடைபயின்றிருக் கின்றார் என்பதை நிதானிக்க முடிகிறது. ஒரு மாமங்க கால மணவாழ்க்கையின் பின்னர், அதுவும் மூன்றாம் திருமணக்கோலம் பூண்டு, அவருடைய வாய்முறைப்பாட்டின் படியே அரிய தவமிருந்து, கொள்ளிவைக்கும் தத்துவக்காரனான என்னை மகனாகக் கண்டவர். பேய்க்கர் என்றாலும், காரியப் பேய்க்கர். அவருடைய வெற்றியின் பூபாளமாகப் பூத்த நான், அளவுக்கு அதிகமான சலுகைகளை எனதாக்கிக் கொண் டேன். இதனால், எதுக்கும் பஞ்சிப்படும் சோம்பேறியாகவும், அளவுக்கு அதிகமாக விழுங்கும் சாப்பாட்டு ராமனாகவும் வளர்ந்தேன்.

கண்டதையும் விழுங்கினதாலோ என்னவோ, எனக்கு நல்ல காய்ச்சல். அடுப்பிலை ஏற்றி வெச்ச ஓட்டைப்போலை மேல் சுடுகுது... கண் மேலை கொண்டு போய்ச் சொருகுது... என்ரை அருமந்த பிள்ளையைக் காப்பாத்துங்கோவன்...' என்கிற அம்மா வின் புசத்தல். அப்பையா கூட பேதலிச்சுப் போனார். அப்பொழுது விக்டோரியா வீதியில் வாசல் திறந்து வைத்திருந்த தர்மாஸ்பத்திரிக்கு என்னைத் தூக்கித் கொண்டு போயிருக்க முடியும். 'ஆரைக்கண்டாலும் குலுக்கிச் சிரிக்கிற உந்தக் கண்காணிப் பெண்டுகளை 'மேய்க்கிற அந்த மூதேசி கலந்து தாற அந்தக் கலர்த் தண்ணியால் 'வருத்தம்' குணமாகும் என்பதிலே அவருக்கு இல்லிப்போலையும் நம்பிக்கை இல்லை.

அந்தக்காலத்தில் சில வைத்தியர்களுடைய வித்தாரச் சாகஸங்களினால், சில ஊர்களே புகழ் பூத்து விளங்கின. குழந்தைகளின் கிரந்தி நோய்களுக்குச் சில்லாலை வைத்தியர், சன்னிக் குணங்களுக்குச் சுதுமலைப் பரியாரியார், முறிவுகளுக்கு ஒட்ட கப்புலம், கட்டுகளுக்கு பருத்தியடைப்பு... இந்தப் பட்டியலில் விசருக்கு கள்ளியங் காட்டுப் பூனைக்கண் நடராசா வைத்தியர் என்று சொல்லும் அளவுக்கு அவருடைய கியாதியும் வளர்ந்து கொண்டிருந்த காலம்... அவர் பண்டாரக் குளத்தின் அயலிலே வாழ்ந்ததினால், நமது குடும்ப வைத்தியர் என்று சொல்லும் அளவுக்கு ஒரு நெருக்கம். ஆனாலும் 'இவனை 'பிளஸ்' ஸிட்டை கூட்டிக்கொண்டு போய்க் காட்ட வேணும்' என்று அப்பையா முடிவெடுத்து விட்டார். சம்பத்தரிசியார் கல்லூரிக்குப் பின்னால் உள்ள சவக்காலைக்குப் பின்னால், றெக்கிளமேசன் றோட்டில், கரையூருக்கும் பாஷையூருக் கும் இடையில், 'பிளஸ்' ஸின் இங்கிலீசு வைத்தியசாலையின் புகழ் கொடிகட்டிப் பறந்த காலம். ( இதனை நிறுவி நடத்திய டாக்குத்தர் சுப்பிரமணியம் தர்மப் பிரபுவாக இருந்தார் என்பதைப் பறைசாற்றி, றவுண் கோலுக்கும் முற்றவெளிக்கும் இடையில், சுப்பிரமணியம் பூங்கா குந்தியிருப்பதை இன்றைய தலைமுறையினரும் அநுபவித்திருக்கலாம்.)

அந்தரத்துக்கு ஒரு வாகனத்தைப் பிடிக்க ஏலாது. நேரகாலத்தோட சொல்லி வைச்சால் உண்டு. சின்னமாமா இருந்திருந்தால், சைக்கிளில் வைச்சு மிதிச்சிருப் பார். வாகனம் பிடிக்க அலைஞ்சவை, தாராக்குளத்து வேலாயுதத்தின்ரை குதிரை வண்டில் சில்லாலைக்குப் போயிற்று என்றார்கள். நல்ல வேளையாக, குட்செற்றடிச் செல்வன், மக்கிக்கிடங்கடியிலை நிண்ட நிலையிலை ஒரு போத்தல் 'தென்னை' அடிச் சுப் போட்டு ரிக்ஷாவைத் திருப்பேக்கை, பேப்பர் செல்லையாவின் கண்ணிலே பட்டதினால் தப்பினேன்! நான் செல்வனின் ரிக்ஷாவில் ஏற்றப்பட்டு, 'பிளஸ்' ஸிடம் கொண்டு செல்லப்பட்டேன். அவன் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் அப்பையா ரிக்ஷாவில் ஏறவில்லை. பாவம், ஓட்டமும் நடையுமாகப் பின்னால் வந்தார். 'உசிர் போனாலும் மனுசனை மனுசன் வைச்சு இழுக்கிற ரிக்ஷாவிலை ஏறமாட்டன்' என்ற கொள்கையை அப்பையா கடைப்பிடித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்தக் காலத்து யாழ்ப்பாணத்தில், சுகதேகிகள் போகவேண்டிய தூரம் பத்துக் கட்டைகளுக்குட்பட்டால், நடந்தே போய்விடுவார்கள். சுன்னாகத்தில் இருந்த ஈழகேசரி கந்தோருக்கு நான் நடந்து போய்வந்தது நல்ல ஞாபகம். 'நடந்த கால் சீதேவி' என்பார்கள். அந்தக் காலத்தில் மாட்டுவண்டிகளுடைய ஆதிக்கம் கோலோச்சியது. 'தாவளம்' போல, பனைப்பகுதியிலிருந்து கிடுகுகளை ஏற்றிக் கொண்டு வண்டிவுக்குப் பின்னால் வண்டிலாக வருவது கண்கொள்ளாக் காட்சி. ஒரு தடவை பூவரசம் குழைக்கட்டுகளை ஏற்றிக் கொண்டு ஒன்றின் பின் ஒன்றாக இருபதுக்கும் மேற்பட்ட வண்டில்கள் பலாலி றோட்டில் செல்வதை எண்ணி மகிழ்ந்திருக்கிறேன்" மாட்டு வண்டில்கள் எத்தனையோ ஷேப்புகளிலும், சைஸ் களிலும் வலம் வந்தன. அந்தக் காலத்தில் வெலிங்டன் தியேட்டர் உள்ள இடம் சிறாம்பியடி. அதிலை ஒரு பெரிய கம்மாலை. வண்டில் சில்லுகள் திருத்தப் பெரிய பட்டடை. ஒரு பக்கத்தில் மாடுகளுக்கு லாடன் அடிக்கப்படும். எத்தனை மாடுகளைக் கட்டிப் போட்டு... மாடுகளின் குழம்புகள் தேயாமல் இரும்புச் சப்பாத்துகள் மாட்டப்படும் விந்தை இக்கால லொறிகளுடைய அனைத்துப் பணிகளையும் மாட்டு வண்டில்கள் செய்வனே செய்தன. வண்டில்களை நிறுத்தி வைப்பதற்கு 'ஸ்ராண்டுகள்' இருந்தன. சிறிய பொருள்களை ஏற்றிச் செல்வதற்குத் தள்ளுவண்டில்கள் பயன்பட்டன. இவற்றை மனிதர்கள் தள்ளிச் செல்வர்.

மனிதர்களுடைய பயண வாகனங்களாக வில்லுவண்டி, திருக்கல் வண்டி, 'பக்கி கரத்தை' ஆகியன பயன்பட்டன. இவை விசையாகச் சென்றன. பெரும்பாலானவை தனியார் உபயோகத்திற்குப் பயன்பட்டன. வண்டிலின் அலங்காரம், கம்பீரம் ஆகிய வற்றை வைத்து கமக்காரனுடைய செல்வநிலையை மட்டுக்கட்டலாம். இவற்றின் மத்தியில் குதிரை வண்டிகளும் இருந்தன. யாழ்ப்பாண ஸ்ரேசனிலே மெயில் வண்டி யில் வந்து இறங்குபவர்களை ஏற்றிச் செல்வதற்கு வாடகைக் குதிரை வண்டிகள் கிடைத்தன. அக்காலத்தில் றீகல் தியேட்டரிலும், வின்ஸர் தியேட்டரிலும் திரையி டப்பட்ட புதுப்படங்களுக்குப் பிரசாரம் செய்வதற்கும் குதிரை வண்டிகளே பயன்படுத்தப்பட்டன. பாண்டு வாத்திய இசைக்கருவிகளுடன் வரும் அந்தக் குதிரை வண்டில்களுக்குப் பின்னால், ஒரு விளம்பர நோட்டீஸ் பெறுவதற்குக் கெஞ்சிக் கொண்டு ஓடுவோம். ஒரு நோட்டீஸ் கிடைச்சால் சுவீப் விழுந்த சந்தோசம்! 'மைக்' பூட்டிய காரிலிருந்து நோட்டீஸ் விநியோகிக்கும் முறை பின்னால் வந்தது. வின்ஸர் தியேட்டர் முதலாளி குதிரையிலே சவாரி செய்ததைப் பார்த்திருக்கிறேன். யாழ்ப்பாணத்தில் போலீஸ் சுப்பிரண்டாகக் கடமை பார்த்த சிட்னி சொய்ஸா குதிரையிலே கம்பீரமாகப் பவனி வருவதைக் கண்டு, யாழ்ப்பாணத்துக் காடையர் கூட்டம் நடுங்கும். காவாலிகளை வளைச்சுப் பிடிச்சு, 'சிலிப்' பாத் தலைகளை மொட்டை அடிப்பதை சொய்ஸா தமது பொலீஸ் கடமைகளுள் ஒன்றாக வைத்திருந் தார். பின்னர், அவர் அவமானப்பட்டுப் போனது வேறு கதை.

இருந்தாலும் சாதாரண மக்களுடைய பயணத்தேவைகளை ஈடுகட்டக் கூடியதாக ரிக்ஷாக்களே பவனி வந்தன. கச்சேரியடியில், கோட்டடியில், ஸ்ரேசனடியில், ஆஸ்பத்திரியடியில், பெரிய கடையில் நிரந்தரமான ரிக்ஷா ஸ்ராண்டுகள் இருந்தன. மனிதர்களை வண்டியில் ஏற்றி வைத்து, மனிதன் இழுத்துக் கொண்டு போகும் எளிமையான வாகனம். ரிக்ஷா இழுப்பவர்கள் மாடுகளைப் போலத்தான் பாடுபடவேணும். ஈழத்துச் சிறுகதை உலகின் மும்மூர்த்திகளான சி. வைத்திலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோருக்குப் பின்னர், கதைக்கலைக்கு வளஞ் சேர்த்தவர் அ.செ. முருகானந்தன். அந்தக் காலத்துச் 'சிறுகதைக் கோவை' யில் ஈழத்துக் கதைஞராய் சிறப்பிக்கப்பட்ட பெருமை அவருக்கு உண்டு. அவ்வாறு இடம் பெற்ற படைப்பு 'மனித மாடு'; ரிக்ஷாக்காரனைப் பற்றிய கதை. ரிக்ஷாக்கார ரின் அவலங்கள் எழுத்து நெஞ்சங்களிலே சலனங்களை ஏற்படுத்தின. சில பணக்காரர் கள் வீட்டுத் தேவைக்காகச் சொந்தத்தில் ரிக்ஷா வாங்கி வைத்து, ரிக்ஷா இழுப் பதைத் தமது வேலைக்காரர்களின் பகுதி நேர வேலையாக்கி இருந்தார்கள். இலக்கிய விமர்சகர் ஏ.ஜே. கனகரத்னா, சிறுவனாகச் சொந்த ரிக்ஷாவில் கல்லூரி வந்ததாக ஞாபகம். வெகு காலத்துக்குப் பின்னரும், அந்த ரிக்ஷாவை மியூசியப் பொருளைப்போல அவர் வீட்டுக்கு எதிரில் பார்த்திருக்கிறேன்.

ரிக்ஷா, சைக்கிள் ரிக்ஷா, ஓட்டோ ரிக்ஷா என்றெல்லாம் தமிழ்நாடு ரிக்ஷா வின் பரிணாம வளர்ச்சியைக் கண்டது. தி.மு.க வளர்த்த அரசியல் கலாசாரம் ரிக்ஷாவுடன் பின்னிப் பிணைந்தது போலவுந் தோன்றுகின்றது. சிவாஜியும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிவகுமாரும் ரிக்ஷாக்காரன் வேஷத்தில் பிய்ச்சு வாங்கினார்கள். எல்லாருக்கும் வாத்தியாரான எம்.ஜி.ஆர். ரிக்ஷாக்காரன் படத்தின் மூலம் தமது அரசியற் செல்வாக்கின் அடித்தளத்தைக் கட்டி எழுப்பினார். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ரிக்ஷாவுக்குச் சமாதி கட்டவிழைந்த அ.செ.மு.வும், இன்று ரிக்ஷாவுக்கு 'குமுத' மான விளக்கம் கொடுக்கும் ஜெயகாந்தனும்!...யாழ்ப்பாணத்தில், சைக்கிள்களின் பெருக்கமும் வாடகைக் கார்களின் வருகையும் ரிக்ஷாவின் உபயோகத்தைச் செயலிழக்கச் செய்தன.

ஆரம்ப காலத்து வாடகைக் கார்கள் 'ஹூட்' (Hood) மடிக்கக் கூடியனவாக இருந்தன. 'ஹூட்' மடித்து, ரத்தினக் கம்பளம் விரித்து, புதுக் கல்யாண ஜோடியை தோழன்- தோழி புடை சூழ அமர்த்தி, 'பெற்றோல் மைக்ஸ்' வெளிச்சத்தில், அரக்கி அரக்கி ஓட்டுவது கண்கொள்ளாக் காட்சியாகும். இதனாற்றான் 'கல்யாணம் காட்சி' என்று சொன்னார்கள். எங்கள் பகுதியில் மயிலு, நாகநாதி,சுப்ரன், இராசையா ஆகிய கார்க்காரர்கள் பிரபலமாகத் திகழ்ந்தார்கள். நாகநாதி வேட்டைப்பிரியர். அப்பையாவின் கூட்டாளி. அந்தக் காரிலே பலதடவை பயணஞ் செய்திருக்கிறேன். கார்களையும், பஸ்களையும் ஓட்டும் 'இறைவர்கள்' பெரிய விண்ணன்கள் என்கிற மலைப்பு எப்பொழுதும் எனக்கு உண்டு. பெரிய ரப்பர் குழாய்கள் பொருத்தப்பட்ட அந்தக் காலத்து 'ஹோன்'களுக்கு நிகர்இல்லை என்று சொல்லலாம். கார் ஸ்டியரங்கை இடக்கையால் பிடித்துக் கொண்டு, வலக்கையால், வெளியே பொருத்தப்பட்டிருக்கும் 'ஹோ'னின் ரப்பர் பகுதியை உள்ளங்கை முழுவதையும் அமுக்கிப் பிசைந்து 'பூம்..பூம்..' என்று ஒலிஎழுப்புவார்கள். அந்தச் செயல் பெண் பிரயாணிகளை நாணச் செய்யும்! கார்க்காரர் பலர் அந்தக் காலத்திலே பெரிய காதல் மன்னர்களாகத் திகழ்ந்ததற்கு இந்த 'ஹோன்' அடிக்கும் விந்தை பெரிதும் உதவியிருக்கலாமோ என்கிற என் சந்தேகத்திற்கு இதுவரை விடை கிடைக்கவில்லை.

ஆரம்ப காலத்தில் தட்டி பஸ்களே ஓடின. மூன்று பக்கமும் வளைச்சு வாங்குகள் மாட்டி வைக்கப்பட்டதைப் போன்று நீட்டு 'சீற்'றுகள். நடுவில் வக்கு. பயணிகளின் சாமான்களும் கடகங்களும் இங்கு குவிக்கப்படும். சாமான்களுடன் 'சாமான்' களாகப் பஞ்சமரும் அமர்த்தப்படுவார்கள். காலியாக இருந்த 'சீற்'றுகளிலே கையைக் காலை நிமித்தக் குந்தி, 'தர்ம அடி'க்குப் பிறகு அறிவு தெளிஞ்ச கீழ்சாதிச் சனங்கள் ஏராளம்! குடாநாட்டின் பஸ் சேவைகளை மூன்று தனியார் பஸ் கம்பனிகள் பங்கிட்டுக் கொண்டன. நான்காவது பஸ் கம்பனி 'என் ஒபி'. பெரியது. குடாநாட்டுக்கு வெளியே, மன்னார், முல்லைத்தீவு, திருக்கோணமலை போன்ற இடங்களுக்கு 'என்ஒபி' தான் போகும். முள்ளியவளைக்கு அப்பால் உள்ள பற்றாப்பளை அம்மனின் வைசாகப் பொங்கலுக்குப் போவதற்காகத்தான் நான் முதன் முதலில் பஸ் பிரயாணம் செய்ததாக ஞாபகம். என்ன சோக்கான பயணம்! முற்பகலில் வெளிக்கிட்டு வலு பின்னேர மாச்சு முள்ளியவளை வர. இவ்வளவு நீண்டநேரம் நான் பயணஞ் செய்ததில்லை. வழியில், முறுகண்டியிலும் இன்னொரு இடத்திலும் சங்கரக்குச்சி கொப்புக் கொப்பாகப் பாலைப்பழம் ஆய்ஞ்சு தந்தார். இஞ்சாறு பாலைப்பழங்களை ஒன்றாகப் போட்டுச் சப்பினால் சூயிங்கம் போல சப்புப்படும். நல்ல வெந்தயக் குழம்போடை பச்சையரிசிச் சோறு கட்டுச் சாதமாகக் கொண்டு போயிருந்தம். மாங்குளத்திலை வண்டிலாச்சி குழைச்சுத் திரளை திரளையாக எல்லார் கைகளிலும் வைச்சவ. அங்கு ஒரு சாப்பாட்டுக் கடை இருந்தது. 'தொங்குமான் இறைச்சி போடுவாங்கள்' என்று அங்கு சாப்பிடப் பயம்.

இரண்டாம் உலகமகாயுத்தம் எல்லாத்தையும் சட்டுப் புட்டு என்று மாத்திப் போட்டுது. ஜீப்புகளும் மிலிட்டரி ட்றக்குகளும் ஓடத் துவங்கின. 'கண் விண்' தெரியாத, புழுதி பறந்த ஓட்டம். அப்பொழுதுதான் நான் முதன் முதலாகக் காப்பிலிகளைப் பாத்தனான். ஓட்டக்கார ஜீபுக்காவைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தனான். பாக்கேல்லை. ஓட்டுமடத்தைச் சேர்ந்த சோனகப் பொன்னம்மா வீட்டிலிருந்து ஒரு பொம்புளையைக் காப்பிலிகள் கூட்டிக்கொண்டு போனவங்களாம். பேந்து அவள் இரட்டைப் பனையடியிலை சவமாகக் கிடந்தவளாம். யாழ்ப்பாணமே கலங்கிப் போச்சு! பேந்தென்ன? காப்பிலிகளுடைய தலையைக் கண்டால், ஒரு பொம்புளைக் காக்கை குருவிகூட றோட்டிலை நிக்காது.

எண்பது ஆண்டுகளுக்கு முன்பே ரயில் வந்துவிட்டது. அப்பொழுது இராமநாதன் துரை தமிழரது- ஏன் இலங்கையரது- தனிப்பெருந் தலைவராகக் கொடிகட்டிப் பறந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலம்! மருதனாமடம் அல்லது நாச்சிமார் கோவிலடியில் நின்று அவர் குடையைக் காட்டினால், ஓடும் ரயில் நின்று அவரை ஏற்றிச் செல்லுமாம். இப்படி எத்தனையோ கதைகள் இதில் உய்த்துணரப்பட வேண்டியது இராமநாதன் துரையின் பெருமை மட்டுமல்ல. அந்தக் காலத்து ரயில்களின் வேகமுந்தான்! கொள்ளையாகப் புகைகக்கும் கரிக்கோச்சிகள். பளைக்கும் காங்கேசன் துறைக்குமிடையில், இன்சினும் இருக்கைகளும் ஒரே பெட்டியில் அடங்கிய 'ரொலி'கள் ஓடின. அவை நெடுங்குளம், கச்சேரியடி நாவான்துறை (நாவலர்வீதி), நாச்சிமார் கோவிலடி போன்ற ரயில் கடவைகளையும் தரிப்பிடங்களாகக் கொண்டன. பெரும்பாலும் 'கேற்' போட்டுப் பாதுகாப்புச் செய்யப்படவில்லை. 'கோச்சி வரும் கவனம் என்ற எச்சரிக்கைகள் மட்டுமே மாட்டப் பட்டிருந்தன. இதனால் 'கொப்பரும் வருவார் கவனம்' என்று எழுதியதாகக் கல்லடி வேலனின் சாமர்த்தியங்களுக்கு வால் வைக்கும் ஜிகினா வேலைகள் சுலபமாகின. எஸ். எஸ். ஸி. சோதினை எழுதியதற்குப் பரிசாக எனக்குக் கொழும்புப் பயணம் வாய்த்தது. புத்தகக் கடை பூபாலசிங்கம்தான் எனக்குப் பயணத் துணை. இரவெல்லாம், பதின்மூன்று மணிநேரம், யன்னலால் வந்த புகையிலே மண்டிய கரித்தூள்களிலே குளித்துக் கொழும்பை அடைந்தேன். பூபாலசிங்கம் நல்ல நாவலாசிரியராகத் திகழ்ந்திருக்க வேண்டியவர். பாவம், எழுத வாய்ப்புக் கிடைக்கவில்லை. ரயில் பாதையிலே திருத்த வேலைகள் நடைபெற்றால் குட்டிக் குட்டி வாகனங்கள் வந்து நிற்கும். சில சமயம் வெள்ளைத்தோல்காரரும் வருவார்கள்.

குட்டி வாகனங்களைப் பற்றிச் சொல்லும் பொழுது, யாழ்ப்பாணத்துக்குக் கார் வந்த போது நடந்த கலாதிகள் பற்றி வெண்தாடிக்கிழவர் சின்னண்ணனுக்குச் சொன்ன கதைகள் நினைவுக்கு வருகின்றன. பணக்காரப் புள்ளி ஒருவர் கொழும்பிலிருந்து 'அவிழ்த்துக் கொண்டு' வந்த ரயில் குட்டியைப் புதினம் பார்க்கச் சென்ற வர்த்தமானத்தை வர்ணித்தார். நாம்பன் குட்டியைப் போன்று உறுமிக் குதித்துக் கொண்டுதான் 'ஸ்ராட்' எடுக்குமாம். இரவில் காவோலைப் பந்தத்தைப் பிடித்துத்தான் ஓட்டினார்களாம். அடிக்கடி அதுக்குத் தண்ணி காட்ட வேணுமாம். அலவாங்கை வளைத்தது போன்ற பெரிய சாவியைப் போட்டு 'ஸ்ராட்' எடுப்பதற்கிடையில் சிலருக்க மூலம் புறப்பட்டுவிடுமாம். 'ஏபோட்டி'களும் 'மொறிஸ் மைனர்' களும் வந்த பின்னர்தான் காரின் பாவிப்பு யாழ் மண்ணிலே வேரூன்றியது. மெயின் றோட்டுகளைச் சறுக்கி, உள்ளுக்குள் பல சங்கிலி 'லானா'க்களை இணைத்துச் செல்லும் யாழ்ப்பாணக் குச்சொழுங்கைகளுக்கு பெரிய கார்கள் சரிப்படாது. 'மரபு' ஆசிரியர் அரவிந்தன் அண்மையிலே தமது தந்தை பற்றிய ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தார். புதிய ' கொன்சோல் ' கார் ஒன்றை வாங்கி வந்த தந்தையார், ஒடுக்கமான ஒழுங்கையால் ஓட்ட முடியாது, அதனைப் பாதி வழியில் நிறுத்தி வைத்தாராம். அப்பொழுது ரயில் பெட்டி ஒன்று தனியே கழன்று நிற்கும் புதினத்தைப் பார்க்க ஊர் கூடிவிட்டதாம்!

கமாலா சர்க்கஸ்காரன்கள் வந்து யாழ்ப்பாணத்தை ஒரு கலக்குக் கலக்கியது, இன்றைய வழுக்கைத் தலையர்களுக்கும் நரைதலையர்களுக்கும் நல்லா ஞாபகம் இருக்கலாம். சிங்கள இனவாதத்தின் கடுப்புக்கும் கொதிப்புக்கும் இலக்கான நூல்நிலையம் அமைந்துள்ள இடம் அக்காலத்தில் பொட்டல் நிலம். யாழ்நகர் மாடுகளின் மேய்ச்சல் வயல். பொதுக் கூட்டங்களின் அரங்கு. அங்குதான் கமலா சர்க்கஸ் டேரா போட்டு யாழ்ப்பாணக் கசவாரங்களுடைய காசுகளைக்கூட வறுகி எடுத்தவனுகள். பாதாளக் கூண்டிலே நடத்தப்பட்ட மோட்டோர் சைக்கிள் சாகஸத்தை உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பாக்க வேணும். மெக்கானிக் அப்பாமணியை வெண்ட மோட்டார் சைக்கிள் ரேஸ்காரன் யாழ்ப்பாணத்தில் இல்லை. அவர் றோட்டிலை சர்க்ஸ்ரிக்ஸ் காட்டி கனகாலம் ஆஸ்பத்திரியிலை கிடந்தவர். பேந்தும் ரேசிலை அவரை அடிக்கேலாது. கொட்டடிச் செல்வேந்திரன் எல்லாம் எந்த மூலைக்கு? சிவன்கோயிலடிச் சீனனும் ரேஸிலை வின்னன் என்று பெயர் எடுத்தவன்.

எனக்கென்னவோ அந்த கமலா சர்க்கஸ் சைக்கிள் சாகஸங்களை மறக்கொண்ணா அந்தரத்திலே கட்டப்பட்ட கொடிக்கம்பிலே, ஒற்றைச் சில்லுச் சைக்கிள்களில், குடைகள் பிடித்தும் பிடிக்காமலும் அவனுகள் செய்த திறிக்கீஸ கள் கொஞ்சமே... எப்படியும் சைக்கிள் ஓடவேணும் எண்ட வெறியை அவனுகளுடைய நூதனமான குண்டி நெளிப்புகளும் தூண்டியும் இருக்கலாம். இல்லாட்டிலும், யாழ்ப்பாணக் கலாசாரத்துக்கு மசிதலும் தவிர்க்க இயலாத நியதி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ன இருந்தாலும், அன்றும் இன்றும், ஏன் என்றுமே யாழ்ப்பாண மண் இயல்பாகத் தத்தெடுத்துக் கொண்ட வாகனம் சைக்கிள்தான். சைக்கிள் என்றால் ரலி; ரலி என்றால் சைக்கிள். இந்த ரலி சைக்கிளுடைய முழுத்துவ வடிவை -நல்லூர்க் கந்தனின் தேர் அசைந்து வரும் பவ்விய கோலத்தை- பிராண்பத்தை என்ற கிராமத்திலிருந்து 'கறியர்'களில் எண்ணெய் டின்களை வைத்து நல்லெண்ணை வியாபாரிகளாய் பவனி வந்தவர்களுடைய வாகனங்களைப் பார்த்தால்தான் தெரியும். முன் 'மட்காட்'டில் பூட்டப்பட்ட குதிரை என்ன? பல்வேறு ஓசைகள் எழுப்பும் மணிகள் என்ன? அலங்காரச் சங்கிலிகள் என்ன? 'சீற் கவர்' அலங்காரம் என்ன? 'பார்கவ'ரின் வனப்பென்ன? 'ரிம்' துடைக்கும் குஞ்சங்கள் என்ன? சும்மா சொல்லப்படாது, அவர்கள் தங்கள் மனைவிமார்களிலும் பார்க்க தங்கள் சைக்கிள்களை கண்ணும் கரிசனையுமாகப் பராமரித்தார்கள். அவர்கள் விடையேறிய கடவுளர்கள்!

இரும்பினாலே செய்த ஏதோ ஒன்றை நமது கவட்டுக்குள் வைத்துக் கொண்டு, நமது சக்தியை விரயஞ் செய்தே அதனை உருள வைத்து, நம்மை அது சுமப்பதாக நம்மை ஏமாற்றும் வித்தைதான் சைக்கிள் ஓட்டுவது என்று அந்த ஆங்கில அறிஞர் பாணியிலே நினைக்க இன்றுவரை தோன்றவில்லை. பழைய சைக்கிள் றிம் ஒன்றை, வட்டுறுப்பான துவரங்கேட்டியால் உருட்டிக்கொண்டோடுவதில் உள்ள சுகமே தனி. அந்த வளையம் இருக்கும் வரையிலும் எத்தனை தடவை வேண்டுமென்றாலும் செல்லத்துரை கடைக்குச் சாமான்கள் வாங்கிவரப்போவதற்கு நான் பஞ்சிப்பட்டதே கிடையாது. அதனை வேகமாக ஓட்டிக்கொண்டு ஓடுவதிலுள்ள 'திறி'லும் திருப்தியும் அலாதியானவை. நான் வளையத்துடன் மினக்கெட, அண்ணன்மார் இருவரும் (பெரியம்மா பிள்ளைகள்) சைக்கிள் ஓட நன்றாகக் கற்றுக் கொண்டார்கள். பின்னாலுள்ள கறியரிலும், முன்னுக்கு பாரிலும் 'டபிளாகக் குந்தி சவாரி செய்தது அலுத்து, நானே ஓட்ட வேணுமென்ற ஆசை விஸ்வரூபம் எடுத்தது. சின்னண்ணனுக்குச் 'சின்'னாக வேலை செய்தும், சில சமயம் 'கப்பம்' செலுத்தியும் அவரை மசிய வைத்தேன். மத்தியானச் சாப்பாட்டுக்குக் காசு கிடைக்கும் வரை பணத்துக்குப் பஞ்சமில்லை. எல்லாம் தயார். விடுமுறையும் வந்தது.

நேற்று முளைச்ச தகரப்பற்றைகளல்லோ, கமலஹாஸனை சகலகலாவல்லவன் என்று தூக்கிக் கொண்டாடுவானுகள். சைக்கிள் கடை ராசா அண்ணர்தான் 'ஒரிசினல்' சகலகலாவல்லவன். அவருக்குத் தெரியாத வித்தை இந்த லோகத்தில் இல்லை. கார், மோட்டார் சைக்கிள், சைக்கிள் என்று அவருக்கு ஓட்டத் தெரியாத வாகனமும் இல்லை. அவர் சைக்கிள் ஓட்டத்திலை காட்டுற வித்தையை நாள் முழுவதும் சாப்பிடாமல் பார்த்துக் கொண்டிருக்கலாம். கால்களை ஹாண்டிலில் போட்டுக் கொண்டு, தலைக்கு மேலே கைகளைத் தட்டிக் கொண்டு, பிறிவீலில் ஓடும் சைக்கிளை எத்தனை சுற்றுச் சுற்றுவார் தெரியுமே? சைக்கிளை றோட்டிலே தள்ளிவிட்டு, ஒரு துள்ளு துள்ளிக் காற்றிலே நீந்தி சீற்றிலே தாவும் லாவகம் என்ன? கை ஹாண்டிலிலும் இல்லை; கால் பெடலிலும் இல்லை; சைக்கிள் வீச்சாக ஓடிக்கொண்டே இருக்கும்... கிராமபோன் பெட்டிகள், பெற்றோல்மாக்ஸ் லைட்டுகள் என்று எதைத்தான் திருத்தத் தெரியாது? கல்யாணம், சாமத்தியச் சடங்கு, பணச்சடங்கு எண்டு எது வந்தாலும், ராசா அண்ணரின் உதவி தேவ்வை. எது பழுதுபட்டாலும் 'ஒருக்கா ராசாவைக் கையோட கூட்டிவா' என்பார்கள். அவர் வந்து திருத்தத் தேவையில்லை கை வைச்சால் போதும். அப்பிடி ஒரு கை. வடிவான ஆம்பிளையும். 'பூலோகரம்பை'யிலும், மனோன்மணியிலும் செக்கண்ட் கதாநாயகனாக நடிச்ச டி. ஆர். மகாலிங்கம் ராசா அண்ணரின் வடிவிலை பிச்சை கேட்க வேண்டும், போங்கள்! நாவலர் றோட்டில் மணிக்கூட்டுத் தெரு ஏறுகிற சந்தியிலிருந்து, நீராவியடிப் பக்கமாக, ஓலைகளும் தகரங்களும் சப்புப் பலகைகளும் இணைந்த ஒரு கட்டடத்தில் ராசா அண்ணரின் வாடகைச் சைக்கிள் கடை இருந்தது. அவருடைய கடையில் எந்த சைஸிலும் சைக்கிள் கிடைக்கும். என்னைப் போன்ற 'பகிடாஸ்' பழகக்கூடிய சைக்கிளுக்கு வேறுகடை இல்லை. கடைக்கு அடையா நெடுங்கதவு.

அவர் கடையில் நின்றால் ஏதாவது 'ரிப்பேர்' வேலை நடக்கும். அவருக்கு ஊர் 'துளவாரம்' கனக்க! திரைச்சீலைக்குப் பின்னால் நின்று, கடையை அவர் மனைவி ராணிதான் நடத்துவா. பெயர் வேறு என்னவோவாம். அவ பெரிய இடத்துப் பெண்ணாம். இவருடைய அழகில் மயங்கி ஓடி வந்தவவாம். பி.யூ. சின்னப்பா நடித்த பிருதிவிராஜ் படம் வந்த காலத்துச் சமாசாரம் என்றபடியால், அவ ராணி சம்யுக்தை என்று பட்டஞ் சூட்டப்பட்டு, 'ராணி'எனச் சுருக்கமாக அழைக்கப்பட்டா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சின்னச் சைக்கிளை எடுத்து, பெருமாள் கோயில் வீதியைச் சுற்றி நான் சைக்கிள் ஓடப் பழகியது ஒரு தனிக்கதை...நான் உழக்க சீற்றைப் பிடித்து வரும் எனது அண்ணர் இடையிடையே கையை விட்டு... என் 'பலன்சிங்' முன்னேற்றத்தில் திருப்தி கண்டு, ஒரு சுற்றுக்கு என்னைத் தனியே விட, தெற்கு வீதியிலே, கேணிக்கு அருகில் கல்லுக் கும்பவுடன் மோதி... என் முழங்கால் சிரட்டையும் சைக்கிளும் உடைந்து... முழங்கால் புண்ணை மறைக்கப்பட்ட அவதியும், சைக்கிள் திருத்தங்களுக்கு மூன்று ரூபாய் கொடுக்கப்பட்ட உத்தரிப்பும்... ஒருவாறு சைக்கிள் ஓடப் பழகிக் கொண்டேன். பெடலை மிதித்து ஏறத் தெரியாது. அச்சிலை கால் வைத்து, நாலைஞ்சு யார்கள் தெந்தி அடிச்சு, 'சீற்றுக்கு மேலாலை காலைத் தூக்கிப் போட்டுத்தான் ஏறுவன். வேர்த்து விறுவிறுக்க, யாழ்ப்பாணத்து தார் வீதிகள், மக்கி றோட்டுகள், ஒழுங்கைகள், குச்சொழுங்கைகள், எல்லாம் நான் மிதிச்ச சைக்கிள் பறந்தது. சாப்பாட்டுக் காசுகள் எல்லாம் சைக்கிள் வாடகைப் பணமாக ராசா அண்ணரின் கைகக்கு மாறியதைப்பற்றிக் கவலைப்படவில்லை. யாழ்ப்பாணத்தின் அத்தனையும் அங்குலம் அங்குலமாக அளந்து தீர்த்த ஆனந்தத்திற்கு ஈடு என்ன?... இதையும் மறக்காமல் சொல்லவேணும். பெடலை மிதித்துச் சைக்கிள் ஏறும் கலையைத் தாம்பரத்தில் எம்மாவின் உதவியுடன் வாலயப் படுத்திய பிறகு, அச்சு வேலைக்கு 'டபிள்'போட்டுச் சைக்கிளில் போனபொழுது, கோப்பாய் போலீசாரிடம் பிடிபட்டுவிட்டேன். வழக்குப் பதிவாகியது. அதனை மறந்து, கம்பளைக்குச் சென்று வேலையிற் சேர்ந்தேன். எனக்குப் பிடி விருந்து பிறப்பிக்கப்பட்டது. எப்படியோ புத்தூர் கிராமக் கோட்டிலே நடந்த வழக்கிலே ஆஜரானேன். வழக்குக்குப் பிறகுதான் முழு லைசென்ஸ் பெற்ற உணர்வும், யாழ்ப்பாண வாகன கலாசாரத்தின் ஒரு குடிமகன் என்கிற பெருமையும் எனக்கு ஏற்பட்டது!

யாழ்ப்பாணக் கலாசாரப் பெருமைகளுள் நீண்ட காலமாக நின்டு பிடிப்பவற்றுள் ஒன்று ரலி சைக்கிள் நாகரீகம் என்று நான் துணிந்து சொல்லுவேன். ரஞ்சன் விஜயரத்னா செத்த பிறகு வரக்கூடிய எந்தக் கொம்பனான சிங்களவன் அனுப்பக் கூடிய கெலிகொப்டர் கண்ணிப்பிற்கும் பதில் சொல்லக்கூடிய திறமை யாழ்ப்பாணத்து சைக்கிள் நாகரீகத்துக்கு உண்டு என்று கத்துவேன். கத்தும் அரசியல் உரிமையாவது தமிழருக்கு உண்டு!

[signature]
3.3.91

---

நிருத்தக் ஷேத்திரா நடனக்கல்லூரியின் ஆண்டுவிழா 20.04.91 அன்று Monash High School இசையரங்கத்தில் மாலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

***சிட்னி***

அண்மையில் அமரரான Dr.V.இராசநாயகம் அவர்களை நினைவு கூருமுகமாக Autralian Tamil Foundation ஆல் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சலிக் கூட்டம் ஹோம்புஸ் ஆரம்பப் பாடசாலையில் 02.03.91 நடைபெற்றது. Paul Zammit, M.P. Burwood, சிட்னி பல்கலைக் கழக சமயக் கல்வி இணைப்பேராசிரியர் Garry Trompf, மற்றும் பலர் Dr.இராசநாயகத்தின் சேவையைப் பாராட்டினார்கள்.

மெல்பன் மெல்லிசைக் குழுவினர் சிட்னியில் Blacktown Civic Center மண்டபத்தில் 31.03.91 மாலை 6.00 மணிக்கு ஈழத் தமிழர் கழகத்தின் ஆதரவில் இசை நிகழ்ச்சி ஒன்றினை அளிக்கவிருக்கின்றனர். இந்நிகழ்ச்சி தமிழ் அகதிகள் நிவாரண நிதிக்கு உதவும் பொருட்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

***அடிலெய்ட்***

இலங்கைத் தமிழ்ச் சங்கம் நடாத்திய அவுஸ்திரேலிய தின விழா 02.02.91 அன்று இடம்பெற்றது. இதில் கர்நாடக இசைநிகழ்ச்சி, நடனநிகழ்ச்சி ஆகியன இடம்பெற்றன. இவ்விழாவிற்கு Hon. Bernice Pfitzner MLC (Liberal Senator) பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுவாரஸ்யமான
# மரபு விமர்சனக் கூட்டம்

**— க. சிறீபாலன்**

மெல்போர்ன் கலை வட்டத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட 'மரபு' விமர்சனக் கூட்டம் 26.02.91 அன்று 5.30 மாலை மணியளவில் Moorabbin நகர மண்டபத்தில் நடைபெற்றது. இதற்கு 50 பேர் மட்டில் சமுகமளித்திருந்தது இலக்கிய ஆர்வலர்களைப் பொறுத்தவரை மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இது மெல்போர்னில் நடந்த இத்தகைய முதல் இலக்கிய நிகழ்ச்சி.

கூட்டத்தைத் தொடக்கிவைத்த தலைவர் காசிநாதன், மெல்போர்ன் கலைவட்டத்தை 'திறன் உள்ளவர்களின் வளங்களைத் திரட்டுவதற்கான அணி' என்று குறிப்பிட்டார். விமர்சனக் கூட்டம் பற்றிக் குறிப்பிடும்போது, 'இங்கே நயம் கூறுவது அல்ல, அதே நேரத்தில் அது கண்டனக் கூட்டமும் அல்ல. ஒரு நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது. அந்த நடவடிக்கையை எல்லோரும் பூரணமாக உணரக்கூடிய வகையில் அதைப் பரிசீலனை செய்யவேண்டும்' என்று மிகவும் இலகுவான முறையில் விளக்கியதைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

'மரபு' இதழ்களில் வந்த சிறுகதைகளைப் பற்றிப் பேசிய சிவசுப்பிரமணியம், 'கலை இலக்கியம் தனிய கலை இலக்கியமாக நின்று விடாமல் சமுதாயத்துக்கு வழிகாட்டக்கூடிய எண்ணங்களைப் பிரதிபலிப்பதாகவும் இருக்க வேண்டும்' என்று கூறினார். கதைகளை அவுஸ்திரேலியாவை மையமாகக் கொண்டவை, இலங்கையை மையமாகக் கொண்டவை என்று இரு பிரிவுகளாகப் பிரித்து நோக்கினார். 'நிறங்கள்', 'கராஜ்சேல்' போன்ற – இப்படியான பிரச்சனைகளை வைத்து எழுதுவதை வரவேற்கிறேன் என்றும், கதைகளில் ஆங்கிலச் சொற்கள் வந்தால் அவற்றை ஆங்கிலத்திலேயே எழுதினால் கதை ஓட்டம் தடைப்படாது என்றும் கூறினார். 'தீபவலிப் பரிசு' கதையைப் பொறுத்தமட்டில் 'கதையில் சொல்லப்பட்ட விஷயம், அதன் முடிவு ஆகியவற்றுடன் ஒத்துப்போக முடியவில்லை' என்று கூறியது இக்கதையையொட்டிய இலக்கிய சர்ச்சைக்கு இறுதியில் வழிவகுத்தது என்றால் மிகையாகாது.

'மரபு' இதழ்களில் வந்த கட்டுரைகளைப் பற்றிப் பேசிய யோகானந்தன், எஸ். பொ. எழுதிவரும் 'நனவிடை தோய்தல்' பற்றிக் குறிப்பிடும்போது : 'பெரும் பகுதி சுயபுராணமாக இருந்தாலும், யாழ்ப்பாணச் சரித்திரத்தை ஒரு பக்கப்பார்வையாக – ஒரு குறுக்கு வெட்டாகத் தருவது மட்டுமல்ல, பாத்திரங்கள் யாழ்ப்பாண சமுகத்தின் வகைமாதிரியானவை, அவற்றை எஸ். பொ. வுக்குரிய தனிநடையிலேயே தந்திருக்கிறார்' என்றார். வாயு பகவான் எழுதும் 'மெல்பன் காற்று'ப் பகுதியில் பல தகவல்களைத் தந்து மிகவும் சிறப்பாக நடாத்துவதாகக் கூறியவர், சுரேஸ் எழுதிய 'தமிழே, உனக்கு பை, பை' என்ற கட்டுரை எழுப்பும் கேள்வி நியாயமானது என்றும் ஆனால் அது சொல்லும் தீர்வு நியாயமல்ல என்றும், அதற்குரிய பதிலைக்காண நாங்கள் உழைக்கவேண்டும் என்றும் கூறியதில் உண்மை இருக்கத்தான் செய்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'கவிதை – மரபு இதழ்களில் வந்த கவிதைகள்' பற்றிப் பேசிய மாவை நித்தியானந்தன், மரபு இதழ்களிலே வந்த கவிதைகளைப் பற்றிப் பேசுவதற்கு நிறைய இல்லை என்றும், எது கவிதையில்லையென்று தெரிந்தால், எது கவிதையென்பதை இனம் காண்பது சுலபம் என்றும் கூறினார். முக்கியமாகத் தற்காலக் கவியரங்குகளில் வசனத்தை கவிதையாக்கும் போக்கை வன்மையாகக் கண்டித்தது மட்டுமல்ல, 'உணர்ச்சிகரமான வசனங்கள் கவிதையல்ல, இதைத்தான் எங்களுடைய சில கவிஞர்கள் மட்டுமல்ல கலைஞர் கருணாநிதியும் செய்கிறார்' என்று கூறியதுடன் நிற்காமல் 'மரபு' இதழில் வந்த ஒரு 'முக்கிய அறிவித்தல்' விளம்பரத்தை உணர்ச்சிகரமாக கவிதை போல் வாசித்தும் காட்டியது சபையில் சிரிப்பொலியை எழுப்பியது!

தமிழ்க்கவிதையின் உருவங்களை வெண்பாவிலிருந்து புதுக்கவிதை வரை சுருக்கமாகவும் அழுத்தமாகவும் எடுத்துக் கூறினார். நன்றாக ஓசை, ஒழுங்கில் அமைந்த சில புதுக்கவிதைகளை உதாரணமாகவும் காட்டினார். முக்கியமாகப் புதுக்கவிதைகளை இரண்டு வகைகளாகப் பிரித்துப் பார்க்கலாம் என்று கூறியவர் மரபுக் கவிதை எழுதிவந்த நுஹ்மான் அகவல் வடிவத்தை எவ்வாறு நன்கு புதுக்கவிதை ஓட்டத்துடன் சேர்த்தார் என்பதைக்காட்ட அவரது 'நாளைய கனவுகள்...' கவிதையையும், மரபை விட்டு முற்றிலும் புதுக்கவிதையாக எழுதிய துஷ்யந்தனின் 'காலையைப் பற்றிய' கவிதையையும் படித்துக் காட்டியது மிகவும் இரசிக்கக் கூடியதாக இருந்தது. 'எங்களது குழந்தைகளுக்குப் பொருத்தமான பாட்டுக்கள் இங்கு இல்லை, கவிஞர் அம்பியும் பேட்டியில் கூறியிருக்கிறார்' என்று எங்களுடைய பரிதாபகரமான நிலையை உணரச்செய்தது பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

இதைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் சதீஸ், நந்தகுமார், முருகபூபதி, அருண் விஜயராணி, திருமதி எலியேசர், சிவா, ஸ்பென்ஸர் முதலியோர் பங்குகொண்டார்கள்.

இறுதியாக ஆசிரியர் அரவிந்தன் பேசும்போது, 'மரபு இதழ்களில் வரும் விஷயங்கள், கருத்துக்கள் எழுதியவர்களின் கருத்துக்களே. பத்திரிகைத் தர்மத்தின் காரணமாகப் புனை பெயர்களை வெளியிட முடியாது ஆனால் எழுதும் கருத்துகளுக்கு முரணான விஷயங்கள் இருந்தால், நீங்கள் தெரிவிக்கும் கருத்துகளும் மரபில் இடம்பெறும்' என்று உறுதி கூறினார். இதை விடுத்து எழுதுவது யார் என்று ஓடித்திரிவதில் பிரயோசனமில்லை, இதனால் எழுதுபவரும் எழுதாமலே விட்டுவிடுவார்' என்று எச்சரிக்கை செய்தார். அரசியல் பற்றிக் குறிப்பிடும் போது அரசியல் எமது வாழ்வின் நாளாந்த அம்சம். அதிலிருந்து நாங்கள் விலகி ஓட முடியாது. பக்க சார்பானதும், கட்சிசார்பானதும் அல்லாத அரசியல், மரபில் இடம்பெறும்' என்று உறுதியாகக் கூறினார்.

இந்த விமர்சனக் கூட்டத்தை ஒழுங்கு செய்த மெல்பேர்ன் கலைவட்டத்தினர் பாராட்டுக்குரியவர்கள். அவர்களது முயற்சி இன்னும் பல துறைகளிலும் தொடர வேண்டும்.

* * *

**'அக்கினிக்குஞ்சு'**

மெல்பனிலிருந்து புதிதாக வெளியாகும் சகோதரப் பத்திரிகையான அக்கினிக்குஞ்சுவை வாழ்க, வளர்க என வாழ்த்தி வரவேற்கிறோம்.

– மரபு.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




***For all your***



**PERSONAL COMPUTER SYSTEM**

Requirements
(Home or Business use)

Please contact



- XT/AT/386 PCs
- Printers
- Modems
- Monitors
- All PC Parts
- PC Repairs

**LOGAN**
**SOFTWARE CONSULTANCY**

**6 Bonnie Court, Ferntree Gully Victoria 3156**

(03) 752 2232

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## SUPER VGA COMPUTER SYSTEMS

*includes*

40 Mb Hard Disc (28 ms)
1.2 Mb Floppy D.D
Serial/Parallel Ports
512K - 16 bits VGA Card
Super VGA Colour Monitor

* KEP AT 286 - 16 MHz
Landmark 21 MHz
1 Mb Ram
$1695

* KEP AT 386 - 25MHz
Landmark 34 MHz
2Mb Ram
$2650

* KEP AT 386 - 25C MHz
Landmark 34 MHz
2Mb Ram
$3190

## EASTER SPECIAL

KEP AT 386 – 25MHz, 2Mb Ram, Landmark 34, 1.44 Mb 3.5″ F.D, 1.2Mb 5.25″ F.D, Serial/Parellel Ports, Compact case, 200 Watt P/S, 101 Key Board, 80Mb Hard Disk, 512K – 16 Bit VGA Card, VGA Colour Monitor

**$2895**

Buy the above system before April and get a FREE COMPUTER TABLE

(For interest free installements please don't hesitate to call R.Sivanathan on 662 3290, 748 6915, or 749 3798)

## KEP TRAVEL

Book your holiday travel plans with KEP TRAVEL before end of May for the following discounted fares

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Colombo | (Rt) | $990 | Singapore | (Rt) | $850 |
| Madras | (Rt) | $1095 | London | (Rt) | $1640 |

eight
eight Forwarding
ir / Sea) Worldwide
naccompanied Baggage
xclusive Service for
olombo Bound
assengers)
3) 748 6916

**KEP SERVICES**

Travel
The Reliable Travel Agency
Agents for Domestic & all International Airlines
Call our Friendly Consultants on:
City: (03) 662 3290, 11 Victoria St (Cnr Exhibition St) Fax: 663 2364
Suburb: (03) 748 6915, 2 Canbera Ave, Hoppers Crossing 3029
AH: 749 3798

Computer Sales &
Consultancy
For all your Needs
Hardware, Software
(Developments)
All PC Parts & Repairs
call (BH): 03-7486915
(AH): 03-749 3798

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்